உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர

# மந்த்ரார்த்த ஸங்க்ரஹ விளக்கம்.

இஃது

சித்தாந்த சைவ சரபம்

சோளங்கிபுரம்

ஸ்ரீலஸ்ரீ சிவஅருணகிரி முதலியார்

அவர்களால்

இயற்றப்பெற்று

சென்னை திருவல்லிக்கேணி

நோபில் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

பிரபவ ஹு சித்திரை மீ

1927

*Registered Copy-right*] [விலை ரூ. **0-10-0**

PRINTED AT

THE NOBLE PRESS, TRIPLICANE,

MADRAS. S. E.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# முன்னுரை.

அன்புடையீர்!

சான்றோர்கள் நிறைந்துள்ள இத்தொண்டை நாட்டின்கண் வேளாண்மரபிற் றோன்றிய பலர் சைவர்களாயும், வைஷ்ணவர்களாயு மிருந்துவருகின்றார்கள். அவர்களுக்குள் பெண்கொள்ளுதலுங் கொடுத்தலுமாகிய சம்பந்தம் பண்டைக் காலந் தொட்டு நிகழ்ந்து வருகின்றது. சைவப்பெண் வைஷ்ணவர்க ளகத்திலும், வைஷ்ணவப் பெண் சைவர்க ளகத்திலும் வாழ்ந்துவருவது யாவருமறிந்த விஷயம். சிவ சின்னங்களை யணிந்த சைவப்பெண் தன்நாயகன் வீட்டில் திருமண்காப்பு தரிப்பதையும், திருமண் காப்புதரித்த வைஷ்ணவப்பெண் சைவவீட்டில் சிவசின்னமணிவதையுங் கண் கூடாகக் காண்கின்றோம். பொதுநலமும், பரோபகாரமும், சமரசஞானமும் பாவிவரு மிக்காலத்தில் இவ்விருசமயத்தாரும் யாவரும் வெறுக்கத்தக்க பயனற்ற மதாபிமானத்தையும், மடிசீலத்தையுமே பொருளெனக்கொண்டு, அன்பு மார்க்கத்தை அறவேயழித்து, ஒற்றுமையின்றி வாழ்தல் மிகவும்

விசனப்படத்தக்கதாம். இவர்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையுறவும், பாழான சமயக்குதர்க்கங்களைவிட்டு அன்பு நெறியில் நிற்கவும் இவ்விரு சமயங்களின் மூலதனமாயுள்ள மூலமந்திரங்களின் ரகஸியார்த்தங்களை நடுநிலைதிறம்பாது ஸங்கிரஹமாகத்திரட்டி இந்நூலைத்தந்தனன். இஃது இவ் வேளாண்மரபினருக்கு மாத்திரமன்று. எல்லாவருணத்திலுமுள்ள சைவ வைஷ்ணவ சீலர்களுக்கும் பெரும்பிரயோசனத்தைத்தரும். ஆனால் அவர்கள் உயர்வொப்பற்ற ஜீவகாருண்ணியத்தை மேற்கொண்டு கோல்லாவிரதியராயிருத்தல் வேண்டும். அத்தகையாரே இம்மந்திரங்களை யுச்சரித்தற்குரியார்.

வேளாளர்களுள்ளும் சிலர் சைவ வைஷ்ணவமரபிலே பிறந்தும்நல்லூழின்மையால் அச்சமயக் கொள்கைகளை யநுசரியாது, "அத்வைதக் கோள்கை யுடையாம் யாம்" என வாளா மகிழ்ந்து, தங்காலமுழுமையும் எகான்மவாத நூல்களிலேயே மிகவுஞ்செலுத்தி, அந்நூற்களிற் கூறியுள்ள உண்மைக் கருத்தை உள்ளபடியுணராது, மிகவுந் தாழ்ந்தபடியில்நின்று, அந்தக்கரணபுறக்கரண தண்டங்களைச்செய்ய சக்தியற்றிருந்துங்கூட, மரத்தின் கிளைகளிலிருக்கும் பழங்களின் பிரதிபிம்பங்களைத் தண்ணீரிற்கண்டு அவற்றைத்தின்று மகிழ்வானைப் போன்று, பாரமார்த்திக ஞானவிஷயங்களிலே தலையிட்டுக் கொண்டு, பல அரிய அநுபவப்பாக்களை மனனஞ்செய்து, ஞானம்போலப் பலபேசி அவற்றில் தங்கள் மனதைக் கூருக்கி வைத்துள்ளார்கள். அன்றியும், தங்குலத்துக்குரியசைவவைஷ்

ணவ சமய நூலாராய்ச்சியேனும், அச்சமய நூலுடையார் சகவாசமேனுஞ் சிறிதுமின்றித் தம்முன்னோர்களணிந்த சின்னங்களைமாத்திரம் சரீரப்பழக்கமாகவும், அழகுபெறவும் அணிந்துகொண்டு, அசுரக்கொள்கைகளையே அவலம்பித்து, அக்கொள்கையுடையார் சகவாசமே பெரிதும்பேணி, பங்கயாசனன் முதற்றேவரையும், பாருளபெரியோரையும், கங்கையாதி தீர்த்தங்களையும், மறைநான்கையும், மந்திரங்களையும், மூர்த்தி, தலங்களையும், பிறவற்றையும் அசத்தியமெனக்கூறி, அறிவு ஒருபுறமும், அநுஷ்டானம் ஒருபுறமுமாய்த் திரிபவராதலின் அவர்களுக்கு இந்நூல் அநாவசியகம்.

அவர்கள் ஆண்டவனை நோக்கிக் கதறிக்கதறி அழுது தம்பாவங்களைப் போக்கிக்கொள்ளும் உள்ளமுடையவரல்லர். பிறவித்துன்பத்தினின்றும் நீங்கிப் பிழைக்க வகையறியாது ப்ரஹ்மஞானம் ஒருபுறமிருக்கப் பசுஞானத்தையே மேற்கொண்டு அருளுடைய ஆண்டவனைப் பலகாலுஞ்சிந்தித்துத் தங்குற்றங்களைக் களைந்துகொள்ள மாட்டாதவர். திரிகரணங்களாலும் வழிபட்டு நெஞ்சமுருகி நின்று பாசவிமோசனஞ் செய்துகொள்ளாதவர். “முதல்வன் பாதத்தைப்பற்றி நின்றால் பாவம்பற்றாது” என்னும் ஆழ்ந்த கருத்தை ஆராய்ச்சி செய்யாதவர். “நின்னிறைவே தாரகமாய் நின்று சுகமெய்தாமல், என்னிறைவே பாவித்தேன் என்னே!'' என்னுஞ் சமரசஞானியின் அநுபவவுரையையும் எண்ணாதவர். அந்தோ! அவர்கள் ஆற்றியவினை யிருந்தவாறென்னே! என்னே!! தட்

டினலன்றோ கதவு திறக்கப்படும். அருகில் செல்லும் ஆற்று நீர் தானேவந்து வாயில் நுழைந்து தாபத்தைத்தணிக்குமோ! "யானே பொய் என்னெஞ்சும் பொய் என்னன்பும் பொய்,. ஆனால் வினையேன் அழுதாலுன்னைப் பெறலாமே." என்று ஆவியோடாக்கை புரைபுரை கனிந்துருகினலன்றி ஜன்ம சாபல்யமுண்டாகுமோ! உண்டாகாது, உண்டாகாது. அவ்வாறு செய்யவொண்ணாதார்க்கு இம் மஹாமந்த்ரங்களாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமும் திருஅஷ்டாக்ஷரமும் யாது பயன்றரும்? ஒரு பயனுந்தராது. என்போல்வார் ஏதேனுஞ் சொன்னாலு மேற்குமோ! ஏற்காது. செப்பினும் வெகு தர்க்கமே.

இதனால், உண்மை வேதாந்திகளை யான் குறிப்பிட்டுக் கூறினவனல்லன். அவர்கள் எக்காலத்திலும், "வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்" என்று திருமூலத்தேவ ரருளியபடி வேட்கை விட்டவரா யுள்ளவர்கள். விட்டகலுந் துறவுடையவரும் அவரே. அவர்கள் எல்லாச்சமயத்தாரிடத்தும் சமரச பாவமுடையவர். மெய்ஞ்ஞானம் கைவரப்பெறும் வரை ஆலயதரிசனம் விடாதுசெய்து வருபவர். அத்தகைய பெருந்தகையாளரை யான் பெரியாரென்றே மதித்து வழி படா நிற்கின்றேன். ஆதலின், ஈண்டு எடுத்துக்காட்டியது போலி வேதாந்திகளையே. அவர்களொழிந்த யேனையோருக்கு இவ்வரிய நூல் எப்பொழுதுஞ் சேமநிதியாயுள்ளது. அவர்கள் தத்தஞ் சமயங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட பிராணன் போன்ற சமரச ஸாராம்ஸங்களையே பெரிதும் பேணி, எல்லாக் கடவு

ளருந் தாமாகவிருக்கும் உயர்வொப்பற்ற மெய்ப்பொருளையே உள்ளன்போடு வழிபட்டு, அன்பைப்பெருக்கி யுய்யுமாறு தெய்வத்திருவருளை வாழ்த்துகின்றேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி இல்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

இக்காய நீங்கி இனியொரு காயத்தில்
புக்குப் பிறவாமல் போழ்வழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன அருள்பெற லாமே.

எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாது வேறொன் றறியேன் பராபரமே.

எவ்வுயிரும் நீங்கா துறையுமிறை சிவனென்
றெவ்வுயிர்க்கு மன்பா யிரு.

சோளங்கிபுரம்
பிரபவ ௵
சித்திரை ௴

**சோ. சிவ அ.**

சிவமயம்

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| க | திருவருட்பயன்-ஐந்தெழுத்தருள் நிலை ... | ௬ |
| ௨ | பஞ்சாக்ஷர ப்ரமாணச் செய்யுட்டிரட்டு ... | க௫ |
| ௩ | ஸ்ரீ பஞ்சாக்ஷர விளக்கம் ... | க |
| ௪ | பஞ்சாக்ஷரம் ஆரிய வேத ஹ்ருதயம் ... | ௩ |
| ௫ | பஞ்சாக்ஷரம் தமிழ்வேத ஹிருதயம் ... | ௪ |
| ௬ | பஞ்சாக்ஷரத்திலுள்ள சிவநாமத்தால் ஆரியவேத முழுமையும் விளக்கமுறல் ... | ௫ |
| ௭ | பஞ்சாக்ஷரத்திலுள்ள சிவபதமே வேதபுருஷனுக்குக் கண்மணி ... | ௬ |
| ௮ | பஞ்சாக்ஷரத்திலுள்ள சிவநாமமே மிகவும் உத்கிருஷ்டம் ... | ௭ |
| ௯ | பஞ்சாக்ஷரமே எல்லாவற்றிற்கும் பிரேரக நிலையாதாரம் ... | ௭ |
| ௰ | பஞ்சாக்ஷரமே பலவகைச் சித்தியின் பொருட்டுப் பலபேதமாதல் ... | ௬ |
| கக | பஞ்சாக்ஷரமும் பிரணவமும் அபேதமெனல் ... | கக |
| க௨ | பிரணவமும் பஞ்சாக்ஷரமே ... | க௨ |
| க௩ | தத்துவமசியும், பிரணவமும், பஞ்சாக்ஷரமும் ஒரே பொருளைக் குறிக்கும் வாக்கியங்கள் ... | க௬ |
| க௪ | பஞ்சாக்ஷர வகைகள் ... | க௭ |
| க௫ | ஸ்தூல பஞ்சாக்ஷர விளக்கம் ... | க௮ |

| | | |
|---|---|---|
| கசா | ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷர விளக்கம் ... | ககூ |
| கஎ | ஸ்ரீ ஆனந்த நடராஜராது திருவுருவம் பஞ்சாக்ஷரத்தாலமைந்தது ... | உசா |
| கஅ | ஸ்ரீ நடராஜமூர்த்தியின் ஆனந்த நடனத்தைத் தரிசித்தற்குரியா ரிவரெனல் ... | ஙய |
| ககூ | ஸ்ரீ சிதம்பரம் தரிசிக்க முக்தியாம் ... | ஙச |
| உய | காரண பஞ்சாக்ஷர விளக்கம் ... | ஙரு |
| உக | மஹா காரண பஞ்சாக்ஷர விளக்கம் ... | ஙசா |
| உஉ | மஹா மநுவிளக்கம் ... | ஙஎ |
| உங | மந்திரங்களின் மஹத்துவ விளக்கம் ... | சக |
| உச | ஸோஹம் பாவனு விளக்கம் ... | சச |
| உரு | திரு அஷ்டாக்ஷர விளக்கம் ... | சஅ |
| உசா | த்வய ரஹஸ்ய விளக்கம் ... | ருச |
| உஎ | சரம ஶ்லோக விளக்கம் ... | ருஎ |
| உஅ | அர்த்த பஞ்சக ஞான விளக்கம் ... | ருகூ |
| உகூ | நவஸம்பந்த விளக்கம் ... | சாய |
| ஙய | ஸ்ரீ வைஷ்ணவர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் ... | சாஉ |
| ஙக | முடிவுரை ... | சாஉ |
| ஙஉ | திருஞான சம்பந்தர்—பஞ்சாக்ஷரத் திருப்பதிகம் | சாஅ |
| ஙங | திருஞான சம்பந்தர்—நமச்சிவாயத் திருப்பதிகம் | எக |
| ஙச | திருநாவுக்கரசர்—நமச்சிவாயத் திருப்பதிகம் | எச |
| ஙரு | சுந்தரமூர்த்திகள்—நமச்சிவாயத் திருப்பதிகம் | எசா |
| ஙசா | திருமங்கை மன்னர்—திருமந்த்ர மஹிமை | எகூ |

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# உமாபதிசிவம் அருளிய திருவருட் பயன்.

## ஐந்தெழுத்தருள் நிலை.

*அதாவது, ஐவகைப்பட்ட திருவெழுத்தாகிய அருளினது முறைமை. இது வீட்டு நெறி காட்டுதலால் திருவருளாகக் கூறப்பட்டது.*

உரையிறந்த இன்பம் அநுபவிப்பதற் கேதுவாகிய நிஷ்டையினை யடைதல் கூடாதார்க்கு இத்திரு வைந்தெழுத்தை விதிப்படி யோதவே அந்நிலை கூடும்.

*அருணூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்*
*பொரு ணூல் தெரியப் புகும்.*

(இ-ள்) *சைவாகமங்களினது கருத்தினையும், வேதங்களினது கருத்தினையும், இவையிரண்டு மல்லாத பல கலைகளினது கருத்தினையும் கற்று வல்லோர் ஆராயப்புகின், அவையாவும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் பொருளாகிய பதி பசு பாசங்களைச் சொல்ல வந்த நூல்களாம்.*

இதனால் எல்லா நூற்பொருள்களும் இப்பஞ்சாக்ஷரத்தி னுள்ளே அடங்குமென்பதாம். (க)

**இந்தப் பஞ்சாக்ஷரம் எதைச் சொல்லுமென்னில்?**

இறை சத்தி பாசம் எழின்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள்.

(இ - ள்) சிவமும், சக்தியும், ஆணவமும், விளக்கமான திரோதானமும், ஆன்மாவும் ஐந்தெழுத் தோரெழுத்தாகிய பிரணவத்தினுள்ளே அமைந்து நிற்கும்.

இதனால் **பிரணவ** மென்று பேர் பெற்று நிற்கும் நுண்ணிய வைந்தெழுத்தின் இயல்பு கூறப்பட்டது. (உ)

**பஞ்சாக்ஷரம் நிற்குமியல்பு எங்ஙனமென்னில்?**

ஊன நடனம் ஒருபா லொருபாலாம்
ஞானநடந் தானடுவே நாடு.

(இ - ள்) பிறவியை விளைக்கும் நகார மகாரங்களாகிய கூத்து ஒரு மருங்காகவும், வீட்டையுதவுஞ் சிகார வகாரங்களாகிய கூத்து ஒரு மருங்காகவும், யகாரமாகிய ஆன்மா இவ்விருவகைக் கூத்துக்கும் நடுப்பட்டதொன்றாகவும் இருத்தலை விசாரித்தறிவாயாக.

ஈண்டு **கூத்தென்றது** ஆன்மாக்களைப் பெத்த முத்தி களில் உய்த்து நடத்துதலை.

இதனால் பஞ்சாக்ஷரத்தின் பொருளியல்பு கூறப்பட்டது. (ங)

**பஞ்சாக்ஷர மிருக்கையில் ஆன்மா சிவத்தை யடையாம லிருப்பானே னென்னில்?**

*விரியமந மேவி யவ்வை மீளவிடா சித்தம்*
*பெரியவினை தீரப் பெறும்.*

*(இ - ள்) மகார நகாரமாகிய மலமும் திரோதமும் மிகவும் இறுகப்புணர்ந்து யகாரமாகிய ஆன்மாவை அருளிலேதிரும்பாத வண்ணஞ் செய்விக்கும். அவ்வான்மா பெரிய பிணியாகிய மல விருளினின்றும் நீங்கின் பேரின்பமாகிய முக்தியையடையும்.*

*மலவிருள் நீங்கவே திரோதமுந் தானே நீங்கும். இதனாலே பந்தமும் மோக்ஷமும் பஞ்சாக்ஷரத்தினாலே அமையுமென்று கூறப்பட்டது.* (௪)

**பஞ்சாக்ஷர மிருக்கையில் ஆணவமலம் நீங்காம லிருப்பானே னென்னில்?**

*மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ*
*மேலாகி மீளா விடின்.*

*(இ - ள்) மயக்கத்தினைப் பொருந்திய திரோதானமும் மலமுமாகிய நகாரமகாரம் இரண்டும் முதலாக வுச்சரிக்கின் அவைகள் நீங்குமோ. இவற்றைக் கீழாக்கிச் சிவமாகிய சிகாரம் மேலாம் வண்ணம் மாறி யுச்சரிக்கின் (மோக்ஷமாம்.)*

*இதனால் நகாரமகாரங்களை முதலாக வுச்சரிப்பது வீட்டினை யவாவுவோர்க் காகாதென்பது கூறப்பட்டது.*

**பஞ்சாக்ஷரத்தை உச்சரிக்கின் மலம் நீங்குமோ வென்னில் ?**

*ஆராதி யாதாரம் அந்தோ அது மீண்டு*
*பாராது மேலோதும் பற்று.*

*(இ - ள்) தமக்காதாரம் வேறாக வெண்ணி அவ்வாறு உச்சரித்தலால் வருந்தீங்கை மறுபடியும் விசாரியாமல் அந்தோ! நகார மகாரங்களை மேலாக உச்சரிக்கும் விருப்பம்.*

*இதனால் அவ்வாறோதுவோர் துணையின்றித் துன்புறுதற் கிரங்கிக் கூறப்பட்டது.* (சு)

**பஞ்சாக்ஷரத்தை எவ்வாறு உச்சரிக்க வேண்டு மென்னில் ?**

*சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்*
*பவமிதுநீ யோதும் படி.*

*(இ - ள்) சிகார வகார மிரண்டினையும் முதலாக உச்சரிக்கின் பிறவித் துன்பம் நீங்கும். மோக்ஷத்தைக் காமுற்றநீ உச்சரிக்கும் முறை யிது.*

*இதனால் முமுக்ஷு ஓது முறை கூறப்பட்டது.* (எ)

**இப்படி பஞ்சாக்ஷரத்தை யுச்சரிக்கின் ஆன்மாவுக்கு வரும் பேறு யாதென்னில் ?**

*வாசி யருளி யதை வாழ்விக்கும் மற்றதுவே*
*ஆசில் உருவமுமா மங்கு.*

(இ-ள்) அவ்வாறு உச்சரிக்கின், வகாரமாகிய அருள் சிகாரமாகிய சிவத்தில் யகாரமாகிய ஆன்மாவைத்தந்து பேரின்பத்திலே யிருத்தும். அல்லாமலும், அவ்வருளே அவ்வான்மாவுக்குக் குற்றமற்ற திருமேனியாயு மிருக்கும்.

இதனால் வகாரமாகிய அருளினது இயல்பு வகுத்துக் கூறப்பட்டது. (அ)

**ஆன்மா மோக்ஷத்திலே இருக்கிற முறைமை யெப்படி யென்னில்?**

ஆசில்நவா நாப்பண் அடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு.

(இ-ள்.) குற்றந்தீர்ந்த திரோதானமும் அருளுமாகிய நகாரவகாரங்கட்கு நடுவில் நில்லாமல் வகாரமாகிய அருளினாலே (யகாரமாகிய ஆன்மா) அவ்வருளாகிய வகாரத்திற்கும் சிவமாகிய சிகாரத்திற்கும் நடுவே ஞானமேயாய்நின்றழுந்துதல் முறைமை.

இதனால் பஞ்சாக்ஷரத்தை மாறி விதிப்படி யுச்சரிக்கின்றவர் அடைந்து நிற்கும் நிலை கூறப்பட்டது. (உச்சரித்தல் - அறிவாலுன்னுதல்) (கூ)

**மோக்ஷாநுபவப் பயன் எப்படியென்னில்?**

எல்லா வகையு மியம்பும் இவனகன்று
நில்லா வகையை நினைந்து.

(இ - ள்.) இந்த ஆன்மா சிவசக்தியினை நீங்கிநில்லாது உடனாய் நிர்குந்திறத்தினைக் கருதி எல்லா வுபாயங்களையும் நூல்களுரைக்கும்.

இதனால் ஆன்மா சிவசக்தியோடு உடனாய்நிற்றலே வேதாகமங்களின் முடிபு எனக்கூறப்பட்டது. (ய)

இவ்வைந்தெழுத்தருள்நிலையில் ஐவகைப் பஞ்சாக்ஷரங்களுள்ளே ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்னும் மூவகைப் பஞ்சாக்ஷரங்களே கூறப்பட்டுள்ளன. மற்றையவிரண்டும் அறிவாலுன்னுதலுங் கூடாமையின் குருமுகத்தாலறிந்து தெளிந்து கொள்ளும்பொருட்டு விடப்பட்டன.

பஞ்சாக்ஷரத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம் ஐந்து. அவையாவன, சிவம், அருள், ஆன்மா, திரோதம், மலம் என்னும் எழுத்துவகையால் ஐம்பொருளாயும், பதி, பசு, பாசம் என்னும் பதவகையால் முப்பொருளாயும், சிவம், சக்தி என்னும் பொருள் வகையால் இருபொருளாயும், சிவம் என்னும் அநுபவவகையால் ஒரே பொருளாயும் இருத்தலாம். இவைகளே முக்தி சாதனமாயும், முக்தி நிலையாயும், முக்தி அநுபவமாயு முள்ளன.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தெழுத்தருள்நிலை முற்றுப்பெற்றது.

சிவமயம்.

# பஞ்சாக்ஷர ப்ரமாணச் செய்யுட்டிரட்டு

## சிவஞான போதம்.

அஞ்செழுத்தா லுள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில்—அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமம் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனாம் சேடனாம் அங்கு. (க)

இந்துவில் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையில் காணில் சிவன்கண்ணாம்—உந்தவே
காட்டாக்கிற் றொன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆட்டாணும் ஓதஞ் செழுத்து. (உ)

(ஈண்டு ஆன்மாவைச் சிவத்துக்கடிமையென்று கூறியது ஆன்மா மலமுழுவதும் நீங்கித்தன்னறிவு வியாபகமாய் விளங்கியவழியுந் தன்னாற் சாரப்பட்ட சிவத்தைமாத்திரம் அறிதலன்றி மற்றொன்றனையும் அறிதல் செல்லாமையின்.)

## சிவஞான சித்தியார்.

ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்க
உள்ளத்தே புகுந்தளிப்பன் ஊனமெலாம்ஓட. (௩)

அஞ்செழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரனுருவும் அஞ்செழுத்தால் அமைந்தமையும் அறிந்திட்டு
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம்பண்ணி
ஆன்மாவின் அஞ்செழுத்தால் இதயத் தர்ச்சித்து
அஞ்செழுத்தால் குண்டலியின் அனலை யோம்பி
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழிநின்று
அஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்கன்
அணையரவம் போற்றோன்றும் ஆன்மாவி லரனே. (௪)

## சிவப்பிரகாசம்.

பந்தமா னவையறுத்துப் பவுதிக முழலுமெல்லைச்
சந்தியா தொழியாதிங்குத் தன்மைபோல் வினையுஞ்சாரும்
அந்தமா திகளிலாத அஞ்செழுத் தருளினாலே
வந்தவா றுரை செய்வாரை வாதியா பேதியாவே. (௫)

திருவெழுத் தைந்திலான்மாத் திரோதமா சருள்சிவன் சூழ்
தரநடு நின்ற தொன்றுந் தன்மையுந் தொன்மையாகி
வரு மந மிகுதியாலே வாசி யி லாசையின்றிக்
கருவழிச் சுழலுமாறுங் காதலார்க் கோதலாமே. (௬)

ஆசுறு திரோத மேவா தகலுமா சிவமுன்னாக
ஓசைகொள் அதனில் நம் மேல் ஒழித்தருள் ஓங்கும் மீள
வாசியை யருளும் மாயா மற்றது பற்று வுற்றங்கு
ஈசனில் ஏகமாகும் இது திரு வெழுத்தி னீடே. (௭)

## கோடிக்கவி.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப்பெரு வெழுத்தும்—நெஞ்செழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி. (அ)

## நெஞ்சுவிடு தூது.

நாடரிய
அஞ்செழுத்தின் உள்ளீடறிவித்தான் அஞ்செழுத்தை
நெஞ்சழுத்தி நேயமயலாக்கி—அஞ்செழுத்தை
உச்சரிக்குங் கேண்மை உணர்த்தியதில் உச்சரிப்பு
வைச்சிருக்கும் அந்த வழி காட்டி. (கூ)

## பஞ்சாக்ஷர ப்ரமாணச் செய்யுட்டிரட்டு.

முற்றுப் பெற்றது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர
# மந்த்ரார்த்த ஸங்க்ரஹ விளக்கம்.

## க - ஸ்ரீ பஞ்சாக்ஷர விளக்கம்.

### யஜுர்வேத பஞ்ச ப்ரஹ்மோபநிஷத்.

(க) பஞ்சாக்ஷர மயம்ஸம்பும் பரம்ப்ரஹ்ம ஸ்வரூபிணம்
நகாராதி யகாராந்தம் ஜ்ஞாத்வா பஞ்சாக்ஷரம் ஜபேத்.

(இதன் பொருள்). பரப்ரஹ்ம ஸ்வரூபமாயுள்ள பஞ்சாக்ஷரத்தைத் தன் மயமாகக் கொண்டவர் ஸம்பு. பஞ்சாக்ஷரம் நகாரம் முதல் யகாரம் இறுதியாக உள்ளதென அறிந்து ஜபிக்கக் கடவர்.

### அதர்வண வேத பஸ்ம ஜாபாலோபநிஷத்.

(உ) ஓமித்யக்ரே வ்யாஹரேத் நமஇதி பஸ்சாத்
தஸ்ஸிவா யேத் யக்ஷர த்ரயம்.

(௩) பரமோ மந்த்ரஸ் தாரகோயம் பஞ்சாக்ஷரஃ.

(௪) வேதாவதம் ஸம்ஶைவம் பஞ்சாக்ஷரம் ஜபம்தஸ் தாரகம் ஸப்ரணவம் மோதமாநாஸ் திஷ்டந்தி.

(இ - ள்). உ. ஓமென்று முதலில் சொல்லுக. நம என்று பின்னர். சிவாய என்னும் மூன்றக்ஷரத்தை அதன்மேல்.

௩. இதனினும் மேலான மஹா மந்திரமாய தாரக மந்திரமில்லை.

௪. வேதங்களுக்குப் பேரணியாயுள்ள சைவ பஞ்சாக்ஷரமாகிய தாரக மஹாமந்திரத்தைப் பிரணவத்துடன் ஜபித்துக் கொண்டு சந்தோஷமடைகின்றார்கள்.

## ஸ்ரீ ருத்ராத்யாயம் - நமகம்.

(௫) நமஶ்ஶிவாயச ஶிவதராயச.

(இ - ள்). சிவன்பொருட்டு நமஸ்காரம். மிகவும் அன்பு செய்கிறவன்பொருட்டு நமஸ்காரம்.

மேலே உதஹரித்த சுருதிப்பிரமாணப்படி **நமஶ்ஶிவாய** என்பதுவே ஸ்ரீ பஞ்சாக்ஷரம். இது சைவர்களனைவருக்கும் மூலதனமாயுள்ளது. வேதத்தின் ஹ்ருதயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. மந்திரங்களெல்லாவற்றிற்கும் நாயகமாயும், தாயகமாயுமுள்ளது. சிவத்தை யறிவதற்கு முக்கிய ஆதாரமாயிருத்தலின் சிவ மூல மந்த்ரம் எனவும், சிவ வாசகம் எனவுஞ் சொல்லப்படுகின்றது. இம்மந்திரத்தை எல்லா

வருணத்தாரும் ஜபிக்கலாம். இது **ஸ்ரீ** காசியில் சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டது. அப்பெருமானே இதற்குப் பரமாசாரியன். இதன் பொருளே பிரணவம்.

## பஞ்சாக்ஷரம் ஆரியவேத ஹ்ருதயம்.

வேதமானது ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என நான்கு திறப்படும். அவற்றுள் நான்காவதாகிய அதர்வண வேதம் மற்ற மூன்றனுள் அடங்கியிருத்தலால் வேதம் **மூன்றே** **(த்ரயீ)** என்று ஸ்மிருதிகளும் அமரஸிம்ஹமுங் கூறும். அம்மூன்றனுள் நடுவிலுள்ளது யஜுர் வேதம். அவ்வேதம் பன்னிரண்டு காண்டங்களாகப் பிரிந்து எண்பத்திரண்டு ப்ரஶ்னங்களுடையதாய் மாந்த்ரமெனவும், ப்ராஹ்மணமெனவும் இரு வேறு வகைப்பட்டு விளங்காநிற்கும். அவற்றுள் முதற்கண்ணுள்ள மாந்த்ரமே ஸம்ஹிதா பாகமெனப்படும். அப்பாகம் ஏழு காண்டங்களுடையது. அவற்றுள்ளும் நான்காவதாகிய நடுக்காண்டமே ஏழு ஸம்ஹிதைகளையுடையது. அவ்வேழனுள்ளும் நான்காவதாகிய நடு ஸம்ஹிதையின் நடுவே, **ஸ்ரீ** ருத்ராத்யாயம் என்னும் சதருத்ரீயமாகிய மஹா மந்த்ர ஸமூகம் மிளிர்கின்றது. அந்த சதருத்ரீயத்தின் நடுவே **நமஸ்ஸோமாயச ருத்ராயச** என்னும் அநுவாகத்தில் **நமஶ்ஶிவாய** என்னும் ஸ்ரீ பஞ்சாக்ஷரம் நாயகத்தன்மை பூண்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அப்பஞ்சாக்ஷரத்தின் நாப்பண் **சிவ** என்னும் அக்ஷரத்வய பதம் வெள்ளிடை மலைபோல் விளங்கு

கின்றது. இதனாலே சிற்றறிவும், சிறுதொழிலும், சின்னாளும், பலபிணியோடுங் கூடிய வுயிர்களுக்கு இச்சிவ நாம ஸ்மரணை யின் மிக்கது வேறொன்றுமில்லையென்பது தேற்றம்.

## தமிழ் வேதமும்,

வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சி வாயவே. எனவும்,

அருமறையி னகத்தானை எனவும்

முழக்கியது. திருமூலத்தேவரும் தமது திருமந்திரத்தில்,

பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே. என்றனர்.

இதனாலே வேதமாகிய மரத்தின் உச்சியிற் பழுத்த பழமும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம். சமயாதீதப் பழமுமிதுவே.

## பஞ்சாக்ஷரம் தமிழ்வேத ஹ்ருதயம்.

தமிழ் வேதமானது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (திருக்கடைக்காப்பு), திருநாவுக்கரசுமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (தேவாரம்), சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் (திருப்பாட்டு), மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் என நான்கு வகைப்படும். முதல் மூன்றனுள் நான்காவதாகிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் அந்தர்க்கதம். ஆதலால் வேதம் - (தேவாரம் - மூவர் சொல்லுந் தமிழ்) - மூன்றே யாகும். அம்மூன்றனுள் நடுவிலுள்ளது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். அது மூன்று திருமுறைகளாக வகுக்கப்

பட்டுள்ளது. அதாவது நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள். அவற்றுள் நடுவிலுள்ளது ஐந்தாவது திருமுறை. அத்திரு முறை நூறு திருப்பதிகங்களையுடையது. அவற்றுள் நடுவி லுள்ளது திருப்பாலைத் துறைத் திருப்பதிகம். அது பதினொரு திருப்பாக்களையுடையது. அவற்றுள் நடுவிலுள்ளது ஆறாவது திருப்பா. அதன் நடுவே "விண்ணினார் பணிந்தேத்த" என் னுந் திருப்பாவின் மத்தியில் சிவாய என்னும் முத்தி பஞ்சா க்ஷரம் பிரகாசித்தொளிர்கின்றது. இதனாலே, திராவிட வேதத்தின் நாப்பணும் சிவநாமமே மிளிர்கின்றமையால் ஆரிய வேதமே தமிழ் வேதமெனப்படும். திருமறைக்காட் டில் ஆரிய வேதம் பிணித்திருந்த திருக்கதவைத் தமிழ்வேதந் திறந்ததே இரண்டு வேதமும் ஒன்றென்பதற்குப் போதுமான மேற்கோளாம்.

## பஞ்சாக்ஷரத்திலுள்ள சிவநாமத்தால் ஆரியவேத முழுமையும் விளக்க முறல்.

பஞ்சாக்ஷரத்திலுள்ள சிவ சப்தத்தால் ஸ்ரீ பஞ்சாக்ஷர மும், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தால் ஸ்ரீ ருத்ராத்யாயமும், ஸ்ரீ ருத் ராத்யாயத்தால் நடு ஸம்ஹிதையும், நடு ஸம்ஹிதையால் நடுக் காண்டமும், நடுக்காண்டத்தால் ஏழு காண்டங்களும், ஏழு காண்டங்களால் ஏனைய பகுதியுடன்கூடிய யஜுர் வேதமும், யஜுர் வேதத்தால் ருக், ஸாமம் என்னும் மற்றிரு வேதங் களும் விளக்கமுறுகின்றன. இதனாலே வேத முழுமையும்

சிவமணம் வீசிக்கொண்டிருக்கின்றதென்பது வெளிப்படை இவ்வுண்மையை

திருவாசகம்,

பரவுவாரிமையோர்கள் பாடுவன நால்வேதம் என்று உண்மை நிறுவியது. ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்

திக்வித்யாம ஶிவாஶ்ரயாம்

"சிவனை ஆஶ்ரயிக்காத சாஸ்திரங்களை நெருப்பிலிடு" என்று உபதேசித்தது.

## பஞ்சாக்ஷரத்திலுள்ள சிவபதமே வேதபுருஷனுக்குக் கண்மணி.

வேத புருஷராகிய சிவபெருமானுக்கு யஜுர்வேதம் சிரசாகவும், அவ்வேத மத்தியிலுள்ள ஸ்ரீ ருத்ராத்யாயம் முகமாகவும், அதன் நடுவிலுள்ள ஸ்ரீ பஞ்சாக்ஷரம் கண்களாகவும், அதனிடையிலுள்ள சிவ என்னும் அக்ஷரத்வயங்கள் கண்மணிகளாகவும் துலங்கா நிற்கும். இக்கருத்தையே உபப்ரஹ்மணமும் முடித்துக் கூறியது. இதனால் இவ்விரு அக்ஷரமாகிய சிவ நாமத்தை வாக்கினாலொருமுறை உச்சரிக்கின் அது விரைந்து பாவங்களையெல்லாம் நாசமாக்கும் என்றும் அதுவே மீளவும் வற்புறுத்தியது. "சண்டாளனாயினும் சிவ என்னும் மொழியைச் செப்புவானாயின் அவனோடு பேசுக. அவனோடு வசிக்க. அவனோடருகிருந்துண்ணுக" என்றது

முண்டகோப சாகை. இதுவே பரப்ரஹ்மத்துக்கு இடு குறிப்பெயர். மாண்டூக்கியம், ந்ருஸிம்ஹம், தர்ஶனம் முதலிய உபநிஷத்துக்களிலெல்லாம் இந்தச் சிவ என்ற சொல்லே துரீயஸ்தானத்தில் பரப்ரஹ்ம சொல்லாகக் குறிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாக்ஷரத்திலுள்ள சிவ நாமமே மிகவும் உத்க்ருஷ்டம்.

பதினெட்டு வித்தைகளுக்கும் சுருதிமேலானது. அச்சுருதியினுள்ளும் ருத்ரைகாதசனியே நனிசிறந்தது. அதனிலும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே மேலானது. அதனுள்ளும் சிவ என்னும் ஈரெழுத்தே மிகவும் உத்கிருஷ்டமானது என்று வேதோப ப்ரஹ்மணங்கள் ஒரே முடிபாய் எடுத்திசைத்தன.

## பஞ்சாக்ஷரமே எல்லாவற்றிற்கும் பிரேரக நிலையாதாரம்.

இம்மந்திரத்திலுள்ள திருவைந்தெழுத்துக்களே பிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பூதங்களைந்தையும்; சுரோத்திரம், த்வக்கு, சக்ஷு, ஜிங்ஙுவை, ஆக்ராணம் என்னும் ஞானேந்திரியங்களைந்தையும்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்னுங் கர்மேந்திரியங்களைந்தையும்; சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னுந் தன்மாத்திரைகளைந்தையும்; மனம், அகங்காரம், புத்தி, சித்தம், உள்ளம் என்னும் அந்தக்கரண பஞ்சகத்தையும்; நிவிர்த்தி, பிர

திஷ்டை, வித்தை, சாந்தி, சாந்திய தீதை என்னுங் கலைகளைந்தையும்; கர்ம சாதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், சிவ சாதாக்கியம் என்னும் சாதாக்கியங்களைந்தையும்; கிரியாசக்தி, ஞானசக்தி, இச்சாசக்தி, ஆதிசக்தி, பராசக்தி என்னும் சக்திகளைந்தையும்; ஸத்தியோ ஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும் பஞ்சப்ரஹ்மங்களையும்; பிரமன், விஷ்ணு, ருத்ரன், மஹேஸ்வரன், சதாசிவன் என்னும் பஞ்சகர்த்தாக்களையும்; ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அநுக்கிரஹம் என்னும் பஞ்சகிருத்தியங்களையும்; அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து என்னும் பஞ்சவர்ணங்களையும், வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் பஞ்சபக்ஷிகளையும் தமக்குள் குறிப்பாயுணர்த்திக் கொண்டிருக்கின்றன. அன்றியும், சொற்கூற்றுப் பிரபஞ்சம், பொருட்கூற்றுப் பிரபஞ்சம் ஆகிய இவ்விரண்டிலுள்ள எல்லாவற்றிற்கும் இவைகளே போதாதாரமாய் விளங்கிக்கொண்டுள்ளன. இதற்குப் பிரமாணம்:—

## உண்மைவிளக்கம்.

அஞ்செழுத்தே யாகமமும் அண்ண லருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராண மனைத்தும்— அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் யாவைக்கு மப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்.

## திருமந்திரம்.

அஞ்செழுத் தாலைந் து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே யமர்ந்து நின்றானே.

ஐம்ப தெழுத்தே யனைத்தும் வேதங்களும்
ஐம்ப தெழுத்தே யனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தே யுமாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போ யஞ்செழுத் தாமே.

## பஞ்சாக்ஷரமே பலவகைச்சித்தியின் பொருட்டுப் பலபேதமாதல்.

பஞ்சாக்ஷரமந்திரமே பிறப்பென்னும் பெருவியாதியி னின்றும் நீங்கிப் பேரானந்தப் பெருநிலையை யடைவதற்குச் சிறந்த சாதனமாயிருப்பதோடு அவரவர் விருப்பத்தின்படி எழுத்துக்கள் மாறுதலால் ஸ்தம்பனம், மோஹனம், வஶ்யம், ஆக்ருஷணம், உச்சாடனம், வித்வேஷணம், பேதனம், மாரணம் என்னும் அஷ்டகர்ம வித்தை முதலிய சித்திகளை யுங் கொடுக்கின்றது. மேலும், அதுவே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமம், ஸத்யோஜாதம் என்னும் பஞ்ச ப்ரஹ்ம மந்திரங்களாகி, அவை ஒவ்வொன்றும் இருபத்தைந்தாக நூற் றிருபத்தைந்து பஞ்சாக்ஷரமந்திரங்களாய் விரிந்துள்ளன. அவற் றை விரிக்கின், ஈசானமாகிய நகாரத்தில் உச்சாடனத்துக்கு

உபயோகமான அகோர பஞ்சாக்ஷர முதல் பரகாயப் பிரவேசத்தைப் பயக்க வல்ல ஸர்வ பஞ்சாக்ஷரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாக்ஷரமும், தத்புருஷமாகிய மகாரத்தில் வித்வேஷணத்தைத் தரவல்ல வித்வேஷண பஞ்சாக்ஷரமுதல் யக்ஷிணிகளைப் புரிய வல்ல யக்ஷிணிபஞ்சாக்ஷரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாக்ஷரமும், அகோரமாகிய சிகாரத்தில் ஸ்தம்பனஞ்செய்யவல்ல ஸ்தம்பன பஞ்சாக்ஷரமுதல் இந்திரனை யழைப்பிக்கவல்ல அகண்ட பஞ்சாக்ஷரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாக்ஷரமும், வாமமாகிய வகாரத்தில் வீக்கத்தையுண்டாக்க வல்ல பேத பஞ்சாக்ஷரமுதல் ஸர்வ பாஷைகளையும் அறியவல்ல ஸர்வபரிபாஷா பஞ்சாக்ஷரம் இறுதியாக இருபத்தைந்துபஞ்சாக்ஷரமும்,ஸத்யோஜாதமாகிய யகாரத்தில் மூலாதாரத்தைத் தரிசிப்பிக்கவல்ல மூலாதார பஞ்சாக்ஷரமுதல் சதுஷ்பீடத்தைத் தரிசிக்கவல்ல சதுஷ்பீட பஞ்சாக்ஷரம் இறுதியாக இருபத்தைந்து பஞ்சாக்ஷரமும் ஆகிய திருவக்ஷரங்கள் ஐந்தினின்றும் நூற்றிருபத்தைந்து பஞ்சாக்ஷரங்களுண்டாகி ஆத்மாக்களுக்கு வேண்டிய பேற்றை யளித்துக்கொண்டிருக்கின்றன. இவற்றின் விரிவெல்லாம் ருத்ர யாமளம், ஆமநாயம் முதலிய நூல்களுள் பரந்து கிடக்கின்றன. சிற்பரச்செல்வர்களாகிய சிவஞானிகளுக்கு மேற்சொன்ன சித்திகள் யாவும் தாமே யேவல்செய்யும். அவர்கள் அவற்றைக் கற்கவேண்டிய அவசியமில்லை. அவைகள் தாமே வந்து பொருந்தும்.

## பஞ்சாக்ஷரமும் பிரணவமும் அபேதமெனல்.

பஞ்சாக்ஷரம் பிரணவத்துக்கு அகத்துறுப்பாயும், உள்ளொளியாயு மிருத்தலினுலே பல்வகைச் சித்தியின்பொருட்டுத் தொகை எறியுங்குறைந்தும் வரும். அப்போது அதனோடு பீஜங்களும், பதங்களும் சேர்ந்துவரும். அங்ஙனஞ்சேர்ந்து பலவகையாய்ப் பேதப்பட்டு வரினும் அவையாவும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம். எட்டெழுத்தும், ஆறெழுத்தும், நாலெழுத்தும், பிஞ்செழுத்தும் மேலைப்பெருவெழுத்தும், பேசுமெழுத்தும் பேசாவெழுத்தும் ஆகிய விவையாவும் பஞ்சாக்ஷரமென்றே கூறப்படும். பஞ்சாக்ஷரமே பிரணவப்பொருளாய் விளங்குதலானும், பிரணவமே பஞ்சாக்ஷரமாயிருத்தலானும் இரண்டும் தம்மில்பேதமில்லாத தனிமந்திரங்களாம். ஆதலால் பஞ்சாக்ஷரத்தின் முதலில் பிரணவமிருக்கவேண்டிய தவசியமில்லை. பிரணவம் வேறு துணைவேண்டாது உச்சரிக்கப்படுவதுபோல் பஞ்சாக்ஷரமும் வேறொன்றின் ஆஶ்ரயமின்றித் தானே தனித்தியங்கிப் பயன்றரும். ஆகையினுலே அவையிரண்டுந் தனிமந்திரங்களாம். சில சந்தர்ப்பங்களில் பிரணவத்தைப் பஞ்சாக்ஷரத்தோடு சேர்த்து உச்சரிப்பதுமுண்டு. அப்படி உச்சரிப்பதால் வரும் இழுக்கேதுமில்லை. சாரைப்பாம்பு என்று சொன்னபோது சாரையாகிய பாம்பு என்று பொருள்படுவதுபோல் ஓம் நமஶ்ஶிவாய என்று உச்சரிக்கும்போது ஓங்காரமாகிய நமஶ்ஶிவாய என்றே பொருள்கொள்க. இதற்குப்பிரமாணம் :—

### திருமந்திரம்.

நகார மகாரஞ் சிகார நடுவாய்
வகார மிரண்டும் வளியுடன் கூட்டி
ஒகார முதற்கொண் டொருக்கா லுறைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே.

### உண்மை விளக்கம்.

ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனில்
நீங்கா வெழுத்தே நிறைசுடராம்.

### தாயுமான சுவாமிகள்.

ஓங்காரமா மைந்தெழுத்தாற் புவனத்தை யுண்டுபண்ணிப்
போங்காய் நடத்தும்பொருளே அகண்ட பரசிவமே.

இந்நூலின் உபக்கிரமத்தில் உதஹரித்த உ. ௬ வேத வாக்கியங்களும் பஞ்சாக்ஷரத்தைப் பிரணவத்தோடு உச்சரிப்பதற்குப் போதியசான்றும்.

### பிரணவமே பஞ்சாக்ஷரம்.

ஓம் என்பதே பிரணவம். அது சமஷ்டிப்பிரணவமெனவும், வியஷ்டிப் பிரணவமெனவும் இருவகைப்படும். சமஷ்டிப்பிரணவம் தொகுத்துக்கூறுவது. அது ஓம் என்பதாம். வியஷ்டிப்பிரணவம் வகுத்துக்கூறுவது. அது அ, உ, ம, என்பதாம். இந்த வியஷ்டிப்பிரணவமாகிய அகார உகார மகார மூன்றும் முறையே ஸத்வ ரஜ தமோ குணங்களையும், பிரம

விஷ்ணு ருத்ரர்களையும், கார்ஹபத்திய தக்ஷிண ஆஹவநீ யாக்னிகளையும், ருக், யஜுர், ஸாமவேதங்களையும், பூமி, அந்தரிக்ஷம், ஸவர்க்கலோகங்களையும், வசுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் என்ற பிதுர்க்களையும், காயத்ரீ, திருஷ்டுப், ஜகதீ என்ற சந்தங்களையும், பூ:, புவ:, ஸுவ: என்ற வ்யாஹிருதிகளையும் பொருளாகக் கொண்டுள்ளன. அகாரம் வாய் திறத்தலினாலேயே ஸ்ருஷ்டியையும், உகாரம் இதழ் குவித்தலினாலேயே ஸ்திதியையும், மகாரம் வாய் மூடுதலினாலே ஸம்ஹாரத்தையும் குறிப்பிக்கின்றமையால் சொல் பொருளென்னும் இருவகைப் பிரபஞ்சங்களும் இந்தப்பிரணவத்திலே தோன்றி நின்று ஒடுங்குமென்றறிக. ஆயின், ஓம் என்னும் சமஷ்டிப்பிரணவம் எதைக்குறிக்குமெனின், மேற்சொன்ன அகார உகார மகாரம் என்னும் பாதங்கள் (அம்சங்கள்) மூன்றுமாத்திரையைக் குறிக்க, நான்காவதாயுள்ள இந்த ஓங்காரமென்னும் பாதம் அர்த்தமாத்திரையாகும். அது மிக ஸூக்ஷ்மமான நாதரூபம். அதற்கு அதிதேவதை துரீயமூர்த்தியான உமையுடன்கூடிய பரமசிவம். அம்மூர்த்தியையே உத்தமோத்தம புருஷனென்றுவேதங்கூறும். அந்தஅர்த்தமாத்திரை ஷாட்குணங்களையும், ஆதர்வர்ணிகளின் அக்னியையும், அதர்வணவேதத்தையும், ஸோமலோகத்தையும், மருத்துக்களை (கணதேவதைகளை)யும், விராட் என்னும் சந்தத்தையும் பொருளாகக் கொண்டுள்ளது. இவற்றால் பிரணவத்தின் நான்கு பாதங்களும், சதுர்த்த ப்ரஹ்மமும் விளக்கப்பட்டன.

## அதர்வணவேத ந்ருஸிம்ஹ தாபந்யோபநிஷத்.

அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ உகாரம் விஷ்ணும்ஹ்ருதயே மகாரம் ருத்ரம் ப்ரூமத்யே ஓங்காரம் ஸர்வேஸ்வரம் த்வாத [ஸாந்தே.

இவ்வாசகம், அகாரம் பிரமனுக்கும், உகாரம் விஷ்ணுவுக்கும், மகாரம் உருத்திரனுக்கும் ஓங்காரம் ஸர்வேஸ்வராகிய திரிமூர்த்திபருக்கும் உரியனவென்றும், அவர்கள் முறையே நாபியிலும், ஹ்ருதயத்திலும், புருவமத்தியிலும், துவாதசாந்தத்திலும் வீற்றிருக்கின்றார்களென்றுந் தெரிவிக்கின்றது. இதனால் கிருத்தியகர்த்தாக்களாகிய பிரமன், விஷ்ணு, ருத்ரர்கள் அகார உகார மகாரங்களில் வசிக்கின்றவர்களேயன்றி அவர்களொருவருக்காவது அவ்வக்ஷரங்கள் உரியனவல்ல. அவ்வக்ஷரங்களுக்கும் அவற்றையுடைய ஓங்காரத்துக்கும் உரியவர் சதுர்த்தவாச்சியராகிய சிவபெருமானே யாவர். ஆதலால் ஓங்காரமாகிய பிரணவம் மும்மூர்த்திகளுக்குப் பிறப்பிடமாயும், மூர்த்தித்திரயாதீத பரப்ரஹ்மத்துக்கு இருப்பிடமாயுமுள்ளது. அவ்வாறுள்ள ஏகாக்ஷரமாகிய ஓங்காரமே மூன்றெழுத்தாயும், அம்மூன்றுங்கூடி ஓம் என்று எழுதும்போது விந்துவாயும், ஓம் என்று உச்சரிக்கும்போது நாதமாயும் விரிதலால் முதல் மூன்றெழுத்தும், இந்த விந்து நாதங்களாகிய வரிவடிவும் ஒலிவடிவுங்கூடி ஐந்தெழுத்தாயிற்றென்பது வெளிப்படை.

### காமிகாகமம்.

ப்ரதமம் தாரகாகாரம், த்விதீயம், தண்டமுச்யதே —
த்ருதீயம், குண்டலாகாரம், சதுர்த்தம், ஹ்யர்த்தசந்த்ரகம்,
பஞ்சமம் பிந்துஸம்யுக்தம், ப்ரணவம் பஞ்சலக்ஷணம்.

என்ற வாக்கியத்தின்படி முதலாவது நக்ஷத்திராகாரமும், இரண்டாவது தண்டாகாரமும், மூன்றாவது குண்டல வடிவும், நான்காவது அர்த்த சந்திரவடிவும், ஐந்தாவது பிந்துவோடியைந்த வடிவும் ஆகிய ஐந்துறுப்புக்களுடைமையின் பிரணவமும் ஐந்து கலைகளையுடையதாயிற்று. இவ்வைங் கலைகளுள் நக்ஷத்திரவடிவம் நகாரம் எனவும், தண்ட வடிவம் மகாரம் எனவும், குண்டல வடிவம் சிகாரம் எனவும், பிறை வடிவம் வகாரம் எனவும், வட்ட வடிவம் யகாரம் எனவுஞ் சொல்லப்படும். இதனாலும் பிரணவமே பஞ்சாக்ஷரமாயிற்று.

மேலும், ருக்வேத முதன் மந்திரத்து முதல் அக்ஷரம் அகாரமாயும், மத்திய மந்திரத்து மத்திய அக்ஷரம் உகாரமாயும், இறுதி மந்திரத்து இறுதி அக்ஷரம் மகாரமாயும் போந்தமையின் ருக்வேத முழுமையும் பிரணவ சொரூபமாயிற்று. இந்தப் பிரணவத்தை விளக்கவே, இரண்டாவதாகிய யஜுர் வேதமெழுந்து முதலிலும் இறுதியிலும் பிரணவத்தைக் கூறி இடையில் பஞ்சாக்ஷரத்தை யோதிப் பொலிவெய்தியது. அவ்வாறே தமிழ்வேதமும் நடுவில் முத்தி பஞ்சாக்ஷரத்தை யமைத்துக்கொண்டு பிரகாசித்தொளிர்கின்

றது. இவற்றாலும் பிரணவமே பஞ்சாக்ஷரமாயினவாறறிக. பிரணவத்துக்கும் பஞ்சாக்ஷரத்துக்குமுள்ள அநந்நியத்துவத்தை ஒருபமான வாயிலாகவும் விளக்குதும். நெல்லுக்கு அரிசி எப்படி உள்ளீடோ அதுபோல பிரணவத்திற்குப் பஞ்சாக்ஷரம் உடகிடையாம். நெல்லினதுபலன் அரிசியாவதுபோல் பிரணவத்தின்பலன் ஸ்ரீ பஞ்சாக்ஷரமேயாம். அரிசியாலடையப் பெறுவது அன்னம். பஞ்சாக்ஷரத்தால் அடையப்பெறுவது அத்வைதஞானம். அன்னத்தால் கிடைப்பது பசியின்மை, திருப்தி, இன்பம். அத்வைதஞானத்தால் கிடைப்பது மும்மல நீக்கமும், சிவபூரணநிறைவும் (அதாவது ஆன்மாவினிடத்து அருள்விளக்கமென்னும் பரவெளி மேலிடலும்), அத்வைதானந்தமுத்தியுமாம்.

## தத்துவமசியும், பிரணவமும் பஞ்சாக்ஷரமும் ஒரே பொருளைக் குறிக்கும் வாக்கியங்கள்.

ஸாமவேத ஸாரமாகிய சாந்தோக்கிய உபநிஷத்தின்கண்ணுள்ள **தத்துவமசி** என்னும் மஹாவாக்கியத்துக்குப் பொருள் **தத்** பரமாத்மாவாகிய ப்ரஹ்மத்துக்கும், **த்வம்** ஜீவாத்மாவாகிய உயிருக்கும், **அசி** அருட்சத்தி வாயிலாக ஐக்கியமென்று சொல்லப்படுகிறது. அவ்வாறே பிரணவத்துக்கும் அகாரமாகிய சிவத்துக்கும் மகாரமாகிய ஜீவனுக்கும், உகாரமாகிய அருள்வாயிலாக ஐக்கியமென்று பொருள்படுகின்றது. அன்றியும், பஞ்சாக்ஷரத்திலும் **சிவ** பரமாத்மாவாகிய சிவத்

துக்கும், நம ஜீவாத்மாவாகிய பசுவுக்கும், ஆய அருட் சத்தி வாயிலாக ஐக்கியமுண்டாமென்று அர்த்தம் பிரகாசிக்கின்றது. இவைகளே வேதோக்தமான வியாக்கியானம். இதனாலே மஹா வாக்கியமாகிய தத்துவமசியும், ஓங்காரமாகிய பிரணவமும், திருவைந்தெழுத்தாகிய பஞ்சாக்ஷரமும் ஒரே பொருளை விளக்கவெழுந்தன வென்பதாம். இவ்வுண்மையறியாத சிலர் ஸம்ஸ்கிருதத்தை உயர்த்தியும் தமிழைத் தாழ்த்தியும் பேசுவதுபோல் பிரணவத்தை உயர்வாகவும் பஞ்சாக்ஷரத்தைத் தாழ்வாகவும் கூறுகிற்பர். இது அறியாமையேயாம். பண்டையத் தீவினைப் பயனுமாம்.

### பஞ்சாக்ஷர வகைகள்.

திருவைந்தெழுத்துக்களைக் கொண்ட ஸ்ரீ பஞ்சாக்ஷரமாகிய மஹா மந்திரம் சாதக அதிகாரிகளின் பக்குவ தாரதம்மியத்துக்குத் தக்கவாறு ஓதுமுறையில் ஐந்து வகையாகக் கூறப்பட்டுள்ளது. அவை ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம், மஹா காரணம், மஹா மநு என்பனவாம். அவையாவன,

(க) ஸ்தூல பஞ்சாக்ஷரம் ந ம சி வா ய.

(உ) ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் சி வா ய ந ம.

(ங) காரண பஞ்சாக்ஷரம் சிவாயசிவ.

(ச) மஹா காரண பஞ்சாக்ஷரம் சி வ.

(ரு) மஹா மநு சி.

## ஸ்தூல பஞ்சாக்ஷர விளக்கம்.

நமசிவாய என்னும் ஸ்தூல பஞ்சாக்ஷரம் நகாரத்தை முதலிலும் யகாரத்தை யிறுதியிலும் வைத்தோதுவது. அது போதகாசாரியராலும் ஸாதகாசாரியராலும் உபதேசிக்கப்படுவது. இம்மைப்பயனும் மறுமைப்பயனும் பயப்பது. எல்லா வருணத்தாராலும், அதீக்ஷிதராலும் ஆஶ்ரயிக்கத்தக்கது. இதில் முதல் நின்ற நகார மகாரங்கள் பாசத்தையும், இடைநின்ற சிகார வகாரங்கள் பதியையும், கடைநின்ற யகாரம் பசுவையும் தெரிக்காநிற்கும். இதனால் பாசமாகிய அசித்தையும், பசுவாகிய சித்தையும் இயக்குகின்றவன் பதியெனவும், அப்பதி இவ்விரண்டையும் உருவமாகக் கொண்டிருப்பதால் **விசுவ சொரூபி** எனவும், இவ்விரண்டுந் தொழிற்படத் தான் ஏதுவாய் நிற்றலால் **விசுவ காரணன்** எனவும், இவற்றிற்கு உடனாய் நிற்றலால் **விசுவாந்தர்யாமி** எனவும், இவற்றைக் கடந்து விளங்கலால் **விசுவாதீதன்** எனவும், இவற்றால் சேவிக்கப்படலால் **விசுவஸேவ்யன்** எனவும் போற்றப்படுகின்றனன். இம் மந்திரத்தைக் கிரமமாக ஓதிவரின் பல்வகைப்பட்ட துன்பங்களும் நிவிர்த்தியாவதோடு சித்த சுத்தியும், மல பரிபாகமும், சிவஞானமுமுண்டாகும். இதன் மஹிமைகளை யெல்லாம் இந்நூலின் இறுதியில் காட்டியுள்ள தேவாரத் திருப்பதிகங்களாலோர்க. ஆளுடைய பிள்ளையார் இருபதிகங்களாலும், ஆளுடைய அரசும், ஆளுடைய நம்பியும் ஒவ்வோர் பதிகங்களாலும் தனித்தெடுத் தோதியுள்ளார்கள். ஆளுடைய வடி

களோ தம்முடைய மணிவாசகத்து முன்வைத்தோதி யருளி ஞர். அன்றியும், நாவரசராகிய பெருந்தகையாரும் தம்மைச் சமண மாக்கள் பழிபாவத்துக்கஞ்சாது நீற்றறையி லிட்ட போழ்து இம்மந்திரத்தைச் சொல்லியே யாதொரு விடையூறு மில்லாமல் விளங்கினர்.

## ஐந்தாந் திருமுறை

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

## திருவாசகமும்

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி.

என்றது.

## ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷர விளக்கம்.

**சிவாயநம** என்னும் ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் **சிகாரவகா** ரங்களை முதலிலும், **யகாரத்தை** இடையிலும், **நகாரமகா** ரங்களை இறுதியிலும் வைத்தோதுவது. இது ஸ்தூல பஞ்சா க்ஷரத்தை நியமமாக வநுஷ்டித்து தீக்ஷைபெற்ற பரிபாகிக்கு

முக்தியின்பொருட்டு உபதேசிக்கப்படுவது. இவ்வைந்தெழுத்துக்களுள் முதற்கண்ணுள்ள சிகாரம் சிவத்தையும், இரண்டாவதாய வகாரம் அருட்சத்தியையும், மூன்றாவதாய யகாரம் ஆன்மாவையும், நான்காவதாகிய நகாரம் திரோதானத்தையும், ஐந்தாவதாய மகாரம் ஆணவ மலத்தையும் உணர்த்துவனவாம். சிகார வகாரங்கள் பதியையும், யகாரம் பசுவையும், நகார மகாரங்கள் பாசத்தையும் விளக்குவனவாம்.

### உண்மை விளக்கம்.

சிவனரு ளாவி திரோதமல மைந்தும்
அவனெழுத் தஞ்சி னடைவாம்.

ஈசனரு ளாவி யெழிலார் திரோதமலம்
ஆசிலெழுத் தஞ்சினடை வாம்.

### திருமந்திரம்.

சிவனரு ளாய சிவன்றிரு நாமஞ்
சிவனரு ளான்மா திரோத மலமாயை.

சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவஞ்சேர்த்த பாசம் அணுககி லாவே.

### திருவருட்பயன்.

ஊன நடனம் ஒருபா லொருபாலாம்
ஞான நடந் தானடுவே நாடு.

இம்மந்திரத்தின் நடுவில் யகாரமாகிய ஆன்மாவை நிற்கும்படி வைத்ததின் பரமரஹஸியம் யாதெனின்! அவ்வான்மா சத்தாகிய சிவத்தின் றன்மையையும், அசத்தாகிய பாசத்தின் றன்மையையு மறிகின்ற அவற்றின் வேருயதோர் தன்மை யுடையதெனவும், அவ்விரண்டின் வியஞ்சக முள்வழி விளங்குவதோர் முறைமையுடையதெனவும், அவ்விரண்டின்பாலும் சார்ந்ததின் வண்ணமாயழுந்தி சதசத்தென்னும் பேர்பெற்று நிற்குமியல்பினை யுடையதெனவும் விளக்குதற்பொருட்டே. இதனுல் ஆன்மா சத்துமன்று அசத்துமன்று. அவற்றின் வேருயதோர் சதசத்துப் பொருளாம். ஆகையிஞலே ஆன்மா எக்காலத்தும் திருவருளைத் துணையாகக்கொண்டே பிறவிக் கடலை நீந்திப் பேரின்பத்தை யநுபவிக்க வேண்டியிருக்கின்ருன். சிவாய என்ற பதத்தில் சேர்த்துப் படிக்கப்பட்டிருத்தற்குங் காரணமிதுவே. இந்த ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்துக்கே ஒருதலை மாணிக்கம் என்றும், முத்தி பஞ்சாக்ஷரம் என்றும் பெயர். இம்மந்திரத்தில் சிவம், அருள், ஆன்மா, திரோதை, மலம் என ஐந்தும் முறையே நிற்றலால் வீடுபேற்றை விரும்புவோர் நமசிவாய வென உச்சரியாது சிவாயநம வென உச்சரித்தல்வேண்டும். அவ்வாறு உச்சரிக்க, அருளாகிய வகாரம் ஆன்மாவுக்குக் களைகணை சிகாரத்தில் சேர்த்து இன்பக் கடலி லழுத்துவிக்கும். ஈண்டு உச்சரிகக என்றது உள்ளத்திலுன்னுதலைச் செப்பியதாகும். மந்திரங்களை யுச்சரித்தல் மானதம், மந்தம், உரையென மூவகைப்படும். அவற்றுள்

**மானதமாவது** மனத்தால் தியானித்தல். அதாவது உள்ளத்துன்னுதல். **மந்தமாவது** ஸூக்ஷ்ம வைகரி வாக்கால் தன் செவிக்கு மட்டுங் கேட்கும்படி யுச்சரித்தல். **உரையாவது** ஸ்தூல வைகரி வாக்கால் தனக்கும் பிறருக்கும் கேட்கும்படி யுச்சரித்தல். இம்மூன்றனுள் சுத்த மானதமாகிய அறிவாற் கணித்தலே சாலச்சிறப்புடைத்தாம். பலனும் ஒன்றுக்கொன்று ஆயிரமாயிரமாகவும், லக்ஷம் லக்ஷமாகவும் அதிகமாகும். இத்தகைச் சிறப்பு வாய்ந்த ஓசைதரு மஞ்செழுத்தாகிய ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தை ஆசாரியன் உபதேசித்த விதிப்படியே நெஞ்சிலழுத்தி யுச்சரித்து, ஜனன மரணங்கட்கு உட்படுத்தும் நகார மாகாரங்களாகிய ஊன நடனத்தை அறவே கைவிட்டு, சிகார வகாரங்களாகிய ஞான நடனத்தைப் பொருந்தி, வகாரமாகிய அருட்பெருவெளி மேலிட மேலிட உள்ளத்துன்னுதலாகிய உச்சரிப்பையும் விட்டு, அதில் நிறைந்து, ஜீவபோதமற்று, அதுதானாய் நிற்கவே அவ்வருள் சிகாரமாகிய ஞேயத்திலழுத்திக் கேவலம் **அறிவாகாரமாய்** நிற்கும் வண்ணஞ் செய்யும். அதுவே பரமுத்தி என்னும் அத்வைதானந்த முத்தியாம். அதனையே நம்மணிவாசகப்பெருமான்,

**கோயின் மூத்த திருப்பதிகம்.**

ஊனடையானுன்ற னடுவிருக்கும்
உடையா ணடுவு ணீயிருத்தி
அடியே ணடுவு ளிருவீரும்
இருப்பதானால்.........எனவும்

முன்னின் ருண்டா யெனை முன்னம்
யானுமதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட்டொழிந்தேன் பெம்மானே......என்னும்

திருப்பாசுரங்களில் நன்கு விளக்கியுள்ளார். இதன் விரிவை எமது திருவாசகக் குறிப்புரையினும் விஷய சூசனத்தினுங் காண்க. இவ்வநுபவ ரஹஸியங்களை யெல்லாம் குருபரன் றிருத்தாளைச் சேர்ந்து, அவனை முறையோடு வழிபட்டு, அவனது உபதேசவாயிலாக ஓது முறையிலோதி, உணரு முறையி லுணர்ந்து, நிற்குமுறையில் நின்று அறிந்துகொள்ளல் வேண்டும். அன்றியும், இப்பஞ்சாக்ஷரம் ஏகாக்ஷரமா மாறும், வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும் அதில் யகாரமும் ஒடுங்குமுறை அவனே யுபதேசிக்கற்பாலன். சிற்றறிவினராகிய நாமோ சிகாரத்தை முதலாக ஓதுமுறையொன்றையே கவனித்து ஞான குருவை யடைதற் குரியவராகின்றோம். இவ்வுண்மையைக் கடைப்பிடிக்க. சிகாரத்தை முதலாக வுச்சரிப்பதற்குச் சில பிரமாணங்கள் வருமாறு:—

### உண்மை விளக்கம்.

நம் முதலா யோதிலருள் நாடாது நாடுமருள்
சிம் முதலா யோது நீ செப்பு.
ஆதி மல மிரண்டும் ஆதியா யோதிறல்
சேதியா மும்மலமுந் தீர்வாகா.

## திருவருட் பயன்.

*மாலார் திரோத மல முதலாய் மாறுமோ*
*மேலாகி மீளா விடின்.*

*சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்*
*பவ மிதுநீ யோதும் படி.*

## தைத்திரீய நாராயணீயம்.

ஶிவாய நம: ஶிவலிங்காய நம:

## திருநாவுக்கரசு மூர்த்திகள் தேவாரம்.

*திருவாய்ப் பொலியச் சிவாய நம வென்று நீறணிந்தேன்*
*தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூ ரானே.*

அல்லலாக வைம்பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாய நம வென்று
நல்ல மேவிய நாதனடி தொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

## திருவாசகம்.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம வெனப்பெற்றேன்.

## திருமந்திரம்.

தெள்ளமு தூறச் சிவாய நமவென்று
உள்ளமு தூற வொருகா லுரைத்திடும்.

சிவாய நமவெனச் சித்த மொருக்கி
அவாய மறவே யடிமைய தாக்கி.
செம்பு பொன்னுகுஞ் சிவாய நமவென்னில்
செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்.
வாறே சிவாய நமச்சிவா யநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை.

## பெரிய புராணம்.

குருகாவூ ரமர்ந்தருளும் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் ரேழ்திருத் தொண்டருடன்
வருவாரப் பந்தரிடைப் புகுந்திதிரு மறையவர்பால்
பெருகார்வஞ் செலவிருந்தார் சிவாய நம வெனப்பேசி.

## ஔவைப் பிராட்டியார்.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை............

மேலே காட்டிய பிரமாணங்களால் எல்லாக் கடவுளருந் தாமாக விருக்கும் சச்சிதானந்தமே சொரூபமாகவுடைய சிவ பரம் பொருள் ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரத்தில் முதற்கண் வைக்கப் பட்டது. துக்கசொரூபமான பாசத்தை நீக்கி ஆனந்தசொரூப மான சிவத்தையடைய உரித்தாயுள்ள பசுவைப் பாசத்துக்கு மேலே சிவத்தோடு சேரவைக்கப்பட்டது. அசத்தாயுள்ள பாசத்தை இறுதியில் வைக்கப்பட்டது. இம்முறை பதி, பசு,

பாசம் என்னும் பிரயோகத்தாலும் நன்கறியலாம். இம்முறை தவறி வழங்கும் சித்து, அசித்து, ஈஸ்வரன்; ஜக ஜீவ பரம் என்ற தொடர்மொழி வாக்கியங்களின் உட்கிடை நம்மவரால் ஊகித்தறியக் கிடக்கின்றது.

## ஸ்ரீ ஆனந்த நடராஜரது திருவுருவம் பஞ்சாக்ஷரத்தா லமைந்தது.

சிதாகாச ரஹஸியத்தை வெளிப்படுத்தும் திருச்சிற்றம்பலமென்னும் அதீதநிலையாய உன்மனு சுலேக்கண்ணே பரையின் வடிவாய் விளங்கும் ஞானகாசமாகிய சிதம்பரத்திலே ஞானமன்ருகிய சிற்சபையிலே திருவருளே திருமேனியாகச் சகளீகரித்து ஆனந்த நிருத்தனஞ் செய்யும் மெய்ப்பொருள் ஞானனந்த வஸ்துவாகிய சொரூப சிவமே. அதுதான் அசண்டாகாரமயம். அதுவே தன்னிலெழுந்து பொதுவில் நடனஞ் செய்தது. அப்பொருள் செய்யுந் தாண்டவ கோலத்துக்கே ஆனந்த நடராஜ மூர்த்தியென்று பெயர். அத்தாண்டவத்துக்கு என்றும் முடிவின்மையால் அநவரத் தாண்டவமென்று வேதம் புகலும். அம்மூர்த்தி சுத்த மாயாகாரிய ஈப்வர தத்துவ நிலையராகிய மஹேஸ்வரமூர்த்தி கொள்ளும் வடிவங்களுளொன்ருய நடராஜமூர்த்தியுமல்லர். குணதத்துவ நிலையராகிய ஸ்ரீ கண்டருத்ரர் கொள்ளும் வடிவங்களுளொன்ருய நடராஜமூர்த்தியுமல்லர். ஆனல் அவ்விரு மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட சம்பு பக்ஷத்து அதிதெய்வ

அதுபற்றியே சிதம்பராலயம் தரிசிக்க முத்திதருமெனச் சாஸ்திரங்கள் பகராநின்றன.

திருநாவுக்கரையரும்

"பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் பிறவாநாளே."

என்று உபதேசித்தருளினார்.

இத்துணை மஹிமைக்குங்காரணம் **ஸ்ரீ** பஞ்சாக்ஷரமேயாம். இன்னும் விரிப்பிற்பெருகுமாதலின் இம்மட்டில் நிறுத்தினோம்.

**காரண பஞ்சாக்ஷர விளக்கம்.**

**சிவாயசிவ** என்னுங் காரண பஞ்சாக்ஷரம்–நகார மகாரங்களாகிய இரண்டக்ஷரங்களுமின்றி ஏனைய மூன்று அக்ஷரங்களுள் **யகர்ரம்** நடுவிலிருக்க மற்றைய **சிகார வகாரங்களாகிய** இரண்டக்ஷரங்களும் முன்னும் பின்னுமாய் நிற்க ஐந்தெழுத்தாகிசிகாரத்தை முதலாகவைத்துஉள்ளத்துன்னுவது. இதற்கே இருதலை மாணிக்கமென்றும், இருதலைக் கொள்ளியென்றும், அதிஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரமென்றும் பெயர். இது சாமானியருக்கு உபதேசிக்கத்தக்கதன்று. அதிதீவிர பக்குவிக்கே உபதேசவாயிலா யுணர்த்தற்பாலது. இதுவும் முக்தி பஞ்சாக்ஷரமே.

**திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.**

விண்ணினார்பணிந் தேத்த வியப்புறு
மண்ணினார்மற வாது **சிவாய**வென்

றெண்ணி னோர்க்கிட மாவெழின் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே.

திருமந்திரம்.

சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க வானந்த மாமே.
ஆனந்த மூன்று மறிவிரண் டொன்றாகும்
ஆனந்த சிவாய வறிவார் பலரில்லை.
ஆறா றகன்று நமவிட் டறிவாகி
வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈறார் பரையி னிருளற்ற தற்பரன்
பேறார் சிவாய வடங்கும்பின் முத்தியே.

## மஹாகாரண பஞ்சாக்ஷர விளக்கம்.

**சிவ** என்னும் மஹாகாரண பஞ்சாக்ஷரம் - மேற்சொன்ன காரண பஞ்சாக்ஷரமாகிய சிகார வகார யகாரங்களுள்ளே **யகாரமாகிய ஆன்மா** மும்மலங்களினின்றும் நீங்கிப் பரையின் வியாபகத்திற் றலைப்பட்டு, அதனோடு அநந்நியமாய் வகார சிகாரங்களின் இடையே நின்று, அக்ஷரம் உன்னுதலையும் விட்டு, அப்பரையின் சொரூபமே எங்குமாய்க் காணப்பெற்றுச் சிவமும் அருளுமாய் நிற்றலாம். இது தமிழ் மறையில் **வாசி** யென முதல் நீண்டும், ஆரிய வேதத்தில் **வஶி**யென இறுதி நீண்டும் விளங்குவதாம். பின்னர், வர்ன வ்யத்தியயத்தினால், அதாவது எழுத்துக்கள் மாறுதலினால், சிவ யென விளக்கு

முற்றுச் சிவ:, சிவை, சிவம் என முப்பாற் பொருளும்பெற்று அதீதப் பொருளாய், பரப்ரஹ்ம சொரூபமாய் வேத சிரசில் மிளிரும். இதுவும் முத்தி பஞ்சாக்ஷரமே. இதன் மஹிமையும் மிக்க ரஹஸ்யமாதலின் குருமுகத்தாலறிந்துகொள்க.

### திருமந்திரம்.

எழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேதர்
* எழுத்தை யழுத்தும் எழுத்தறி யாரே.

* தலையெழுத்தை.

### திருவருட்பயன்.

வாசி யருளி யதை வாழ்விக்கு மற்றதுவே
ஆசி லுருவமுமா மங்கு.

ஆசினவா நாப்பண் அடையா தருளினல்
வாசியிடை நிற்கை வழக்கு.

### மஹாமநு விளக்கம்

சி என்னும் மஹாமநுவாகிய முக்தி பஞ்சாக்ஷரம் - மஹாகாரண பஞ்சாக்ஷரத்திலுள்ள சிகார வகாரங்க ளிரண்டினுள் வகாரமாகிய வருளில் நிறைந்து நின்ற ஆன்மாவை அருளொடுந் தன்னுள் லயப்படுத்திக்கொண்டு கரைகடந்த பேரானந்தப் பெருவெள்ளத்தி லழுத்தி ஏகசொரூபமாய் நிற்கும். அப்பொழுது ஆன்மா நீ நான் என்றிரண்டின்றி அறிவுருவாய் எங்கும் நிறைந்து நிற்பதுவே இம்மநுவின் மஹாரஹஸ்யம். இதுவே

எல்லாரும் ஈடேறும்பொருட்டும், குணங்குறி யற்று இன்ப நிட்டை கூடுதற்கும் எம்மான் கைகாட்டிய கருத்து. பரிபூரண நிலையும் இதுவேயாம். இது சிவஞானிகளாலேயே அநுபவ வாயிலாயுணரப்படுவது. "அறிவு வடிவென் றறிந் திருந்தேனே" என்றூர் திருமூலர். இம்மஹா மநுவுக்கே இறையெழுத்தெனவும், பெருவெழுத்தெனவும், பேசாவெழுத்தெனவும் ப்ரஹ்ம பீஜமெனவும் பெயர். இந்தச் சி என்னும் எழுத்தில் ச் (சகார மெய்) - வரிவடிவு; அ - பிரணவாக்ஷர மூலம்; இ - அவ்வக்ஷர மூலத்தை விளக்கும் அருட்பூரணம்; இம்மூன்றின் தோற்றமும் அசைவும் - விந்து; இதன் புடை பெயர்ச்சியாகிய ஒலியே - நாதம். இவ்வைந்தும் ஒன்றுயமைந்ததே சி. இதன் விளக்கம் மெய்ஞ்ஞானிகளுக்கே புலப்படுவதாம்.

## திருவாசகம்.

சிவனென யானுந் தேறினன் காண்க.

நாமொழிந்து,

சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

## திருமந்திரம்.

சீவ னெனச்சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே.

நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பதும்
நானென்ற ஞானம் முதல்வனே நல்கினன்
நானென்று நானும் நினைப்பொ ழிந்தேனே.

நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதம்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே.

நானென நீயென வேறில்லை.
நானென் றவனென்கை நல்லதொன் றன்றே.

### திருக்களிற்றுப்படியார்.

சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்
சிவமாகி யேயிருப்ப தன்றிச்—சிவமென்
றுணர்வாரு மங்கே யுணர்வழியச் சென்று
புணர்வாரு முண்டோ புவி.

அதுவிது வென்றும் அவன்நானே யென்றும்
அதுநீயே யாகின்று யென்றும்—அதுவானேன்
என்றுந் தமையுணர்ந்தா ரெல்லாம் இரண்டாக
ஒன்றாகச் சொல்வாரோ வுற்று.

### தாயுமான் சுவாமிகள் பாடல்.

நீயென நானென வேறில்லை யென்னும் நினைவருளத்
தாயென மோன குருவாகி வந்து.

யான்றன் எனலறலே இன்பநிட்டை யென்றருணைக்
கோன்று னுரைத்தமொழி கொள்ளாயோ.

எங்குஞ் சிவமே இரண்டற்று நிற்கினெஞ்சே
தங்குஞ் சுகநீ சலியாதே.

நீயற்ற வந்நிலையே நிட்டை.

நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல் நடுவே
சும்மா, தானமரும் நிலையெனவே சத்தியம் சத்தியம்.

என்னையுந் தன்னையும் வேரு—உள்ளத்,
தெண்ணாத வண்ணம் இரண்டற நிற்க.

உனக், கானந்தம் வேண்டின் அறிவாகிச் சற்றே
நின்றுற் றெரியு மெனவே.

தானான தன்மயமே யல்லாலொன்றைத் தலையெடுக்க வொட்டாது.

அதுவெனலும் அறவேவிட்டு, மதுவுண்ட வண்டெனவுஞ் சநகனாதி மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும், பதியிந்த நிலை.

ஆராலு மறியாத சத்தன்றோ அதுவாய்,
அங்கிருநீ யெங்கிருந்தும் அதுவாவை கண்டாய்.

கந்தரநுபூதி

யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானா நிலைநின் றதுதற் பரமே.

இன்னும் அனேக பிரமாணங்களுள. விரிவஞ்சி விடுத்தாம். இதுவரையிலுங் கூறிப்போந்த ஐவகைப் பஞ்சாக்ஷரங்களுள் வைதிக சைவர்களாகிய நாம் நியமமாக உச்சரிக்க வேண்டிய மந்திரங்கள் இரண்டே. அவை ஸ்தூலமும்,ஸூக்ஷமமுமாம்.

## மந்திரங்களின் மறைத்வ விளக்கம்

மேற்சொன்ன நியமங்களை விட்டுச் சிலர் செய்யவேண்டியது இது, தவிர்க்கவேண்டியது இது என்றுணராமலும், மந்திரப் பொருத்தம் ஆவசியகமென்பதை யறியாமலும், பலரிடத்திலும் பலவாறு உபதேசிக்கப்பெற்றும், சாஸ்திரங்களில் எழுதி வைத்திருக்கும் மந்திரங்களைக் குருமுகத்தாற்பெறாமல் தாமே யுச்சரித்தும், நிஷ்பலமடைந்து அனேக தீமைகளுக்காளாகி நிர்ப்பாக்கிய நிலையடைகின்றார்கள். அப்படிச் செய்வது பெருங்குற்றமென்று ஈண்டெடுத்துக்காட்டினோம். சித்தர்களோ தங்களுக்குப் பொருத்தங் குறைவாயுள்ள மந்திரங்களையுங்கூடத் தங்களுக்குப் பொருந்துமாறு அக்ஷரங்களை மந்திரார்த்த நியாயங்கொண்டு முன்பின்னாக மாற்றிக்கணித்து, வேண்டிய சித்திகளைப் பெற்றுக்கொள்ளுகின்றார்கள். அப்படிச் செய்யவோ நம்மவர்களுக்கு சாத்தியமின்று. ஆதலால் ஓசை தருமைந்தெழுத்தையே குருமுகமாயறிந்து விதிப்படியுள்ளத்துன்ன, எல்லாப் பலன்களுஞ் சித்தியாகும். மந்திரத்தால் யானை முதலிய மிருகங்களும் சர்ப்ப முதலிய விஷ ஜந்துக்களும் கட்டுப்படுதல், பலருமறிந்த விஷயம். ஒருவர் ஒரு

தேவதையையோ அல்லது ஓர் மஹானையோ தியானித்த மாத்திரத்தில் அந்தத் தேவதை அல்லது அந்த மஹான் அவருக்கெதிர்ப்பட்டதாகவும், ஓர் அஸ்திரத்தைச் சங்கர்பித்த மாத்திரத்தில் அவ்வஸ்திரம் அவரிடம் வந்ததாகவும் புராணேதிகாசங்களிற் கூறப்பட்டிருந்தல் பிரசித்தம். இதனால் மந்திரத்தா லாகாத காரியம் ஒன்றுமின்றென்று தெரியவருகின்றது. ஆயினும், மந்திரங்களை எப்பொழுதும் குருமுகத்தாற் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றே ஈண்டு நாம் வற்புறுத்துகிறோம். பீஜாக்ஷரங்களை மந்திரங்களோடு சேர்த்துக் கிரமமாய் ஜபிக்கின், வேண்டிய இஷ்ட சித்திகள் கிடைப்பதாயினும், மந்திர தேவதைகளுக்கு விருப்பமில்லாத காரியங்களைச் செய்யின் அத்தேவதைகள் உடனே அவனுக்கு அனேக தீங்குகளைச் செய்து அவனை நிர்ப்பாக்கியனாக்கி விடும். ஆதலால் மந்திரங்களைத் தம்மிஷ்டப்படி ஜபித்தல் கூடாது. மனமும் நிர்மலமாயிருத்தல் வேண்டும். பரோபகாரச் சிந்தையும் மிக்க ஆவசியகம். சிவபெருமானுக்குச் செய்யும் பலவித ஆராதனைகளுள் பரோபகாரமும், நமஸ்காரமுமே சிறந்த ஆராதனங்களாம். இப் பரோபகாரத்தைக் கைவிட்டால் மந்திரங்கள் சிறந்த பலனைத்தரா.

### திருக்குறள்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

தொல்காப்பியம்

நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.

எனவும் போந்த ஆணைகளைக் கூர்ந்து யோசித்து மந்திரங் களின் ஆற்றலைத் தெரிந்துகொள்க. சாதாரணமாய் வீட்டு வாசற்படியின் றலைப்பில் **"உள்ளே வரக்கூடாது"** என்று எழுதி வைத்திருந்தால் அவ்வாக்கியத்தைக் கண்டமாத்திரத் தில் உள்ளே செல்ல அஞ்சி வெளியில் நின்றுவிடுவது யாவரு மறிந்த விஷயம். சாதாரணமான எழுத்துக்களுக்கே இத்த கைய வல்லமை யிருக்குமாயின் சிவ சக்திதோய்ந்த மந்திரங் களின் ஆற்றலைக் கூறவும் வேண்டுமோ. மந்திரங்கள் யாவும் ஜடமாயிருந்தாலும் ஆன்மாக்களின் நன்மையைக் கருதியே பிரதம சிருஷ்டியில் அவை யாவும் நாதரூபமாய் உண்டாக்கப் பட்டன. ஆனமையின், அக்ஷர ஸமூகமாகிய மந்திரங்களை அக்ஷர ஸ்வரூபிணியாகிய அருட்சத்தி தோய்ந்து நின்று ஆன் மாக்களைக் காக்கின்றது. அது எதுபோலுமெனின், அக்கினி யை யுற்பத்தி செய்யும் அரணியென்னுங் கட்டைமீது, உத்த ராரணியென்னும் ஊன்றிக்கடையுங் கட்டையை வைத்து இடைவிடாது கடையின் அவ்விரண்டினுள்ளும் மறைந்து நிற் கும் அக்கினி வெளிப்படுவதுபோல ஆன்மாவை அரணியாக வும், மந்திரத்தை உத்தராரணியாகவும் வைத்துத் தியானம் என்றகடைதலை இடையறாது செய்யின் அம்மந்திரத்துக்குரிய தேவதை வெளிப்பட்டு ஆன்மாவைக் காப்பதோடு அவன்

விரும்பிய பலன்களையெல்லாந் தரும். ஆதலால் மந்திரத்தைச் சாதாரண சொல்லென்று கருதவேண்டாம். இன்னுங் கூற வேண்டிய விஷயங்கள் அனேகமுள. விரிவஞ்சி விடுத்தாம்.

## ஸோஹம் பாவனு விளக்கம்

இந்நூலின் (கூக)ம்பக்கத்தில் ஸோஹம் பாவனை கூறப் பட்டுள்ளது. ஸோஹம் என்னும் மொழி, ஸ:+அஹம் என்னும் இரண்டு சொற்களா லாக்கப்பட்ட ஒரு தொடர் மொழி. இதில் பிரணவம் பின்னிக் கிடக்கின்றது. இதன் பொருள் **அவன் நான்** என்பதே. அதாவது, ப்ரஹ்மம் நான் என்பதாம். **ப்ரஹ்மம் நான்** என்றாலும், **நான் ப்ரஹ்மம்** என்றாலும் இரண்டுமொன்றேயென்று அசுர வேதாந்தங்கற்றோர் கூறுவர். அது பொருத்தமின்றென்பதை சிவஞானிகள் வாக்குகளாற் றெளிவிப்பாம்.

### திருவாசகம்

நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

### திருமந்திரம்

நானு மழிந்தமை நானறி யேனே.
நாமய மற்றது நாமறி யோமே.

### திருவுந்தியார்

நாமற்ற பின்னுதன், தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தா னென்றுந் தீபற.

## நெஞ்சுவிடு தூது

தாம்பிரமங் கண்டவர்போல் தம்மைக்கண் டாங்கதுவே
நாம்பிரம மென்பவர்பால் நண்ணுதே.

## தாயுமான சுவாமிகள்

நாம்பிரம மென்றால் நடுவேயொன் றுண்டாமல்
தேம்பியெல்லா மொன்ருய்த் திகழுநா ளெந்நாளோ.

நானென தன்மை நழுவியே யெவ்வுயிர்க்கும்
தானென வுண்மைதனைச் சாருநா ளெந்நாளோ.

ஊனென்றி நாதன் உணர்த்துமதை விட்டறிவேன்
நானென்ற பாவிதலை நாணுநா ளெந்நாளோ.

சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
அல்லும் பகலு மாற்றுவதென்—நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் நாமில்லை யென்பாரந்தோ
மோனமய மான வுரை.

நான்றா னெனுமயக்கம் நண்ணுங்கா லென்னுனை
வான்ரு னெனநிறைய மாட்டாய்நீ.

நானென நிற்குஞானம் ஞானமன் றந்தஞானம்
மோனமா யிருக்க வொட்டா.

யாங்களே கடவுளென் றிடும் பாதகத்தவரும்.
நட்டநடு வேயிருந்த நாமேன்பர் சிலர்.

ஞானத் தெய்வத்தை நாடுவன் நானெனும்
ஈனப் பாழ்கெட வென்று மிருப்பனே.

நின்னிறைவே தாரகமாய் நின்றுசுக மெய்தாமல்
என்னிறைவே பாவித்தேன் என்னே பராபரமே.

ஸூதஸம்ஹிதை

கரியவனும் யாம்பரமென் றெண்ணியதற்
களவில்பிழை கலந்த தென்றால்
உரியபிறப் பிறப்பொழியாச் சீவர்சிலர்
யாம்பர மென் றுரைப்ப ரந்தோ.

இராமலிங்க சுவாமிகள்

நாமே பிரமமெனப் பிறர்க்குரைத்துப் பொங்கிவழிந்தாங்கே
பிதற்றுகின்ற பெரியவர்தம் பெரியமதம் பிடியேல்.

மேலே உதஹரித்த பிரமாணங்களின்படி நான் பிரமம் என்பது நவை வழியென்றும், பிரமம் நான் என்பது நல்வழி யென்றும் பெறப்படுகின்றதன்றே.

தாயுமான சுவாமிகள்

உன்னைநானென்று பாவிக்கின் அத்து
விதமார்க்க முறலாம்............என்றனர்.

"அஹம் ப்ரஹ்மம்" என்பதில் நான் என்னும் முனைப்பு முற்பட்டு நிற்றலால் அதை முன்பின் மாற்றி "ஸோஹம்" என உச்சரிக்கும்படி வைதிக சைவம் பகர்கின்றது. அம்மந்

திரத்திலுள்ள இரண்டு மெய்களை நீக்கிவிட்டால் எஞ்சுவது ஒப்பற்ற பிரணவமே. அப்பிரணவமே முமுக்ஷுக்களுடைய பூஜ்யவாசகமாயும் விசேஷ மந்திரமாயுமுள்ளது. அம்மந்திரத்தின் ரஹஸியோபாசனத்தை எவனொருவன் சத்குரு கடாக்ஷத்தாலறிந்து அப்பியசித்துச் சித்திபெறுவானோ அவனே பரம யோகியாவன். அவனே பிரம நிஷ்டர்களுக்குள் முக்கியமானவன். அவனுக்கே ஈஸ்வர சம்பந்தமான எல்லா ஐஸ்வர்யத்தன்மையுமுண்டு. அம்மஹானே,—

**பகவத்கீதை**

ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வஃ

(இ-ள்) எல்லாவற்றையுமடைவாய், எல்லாமுமாவாய். என்று **ஸ்ரீ** கண்ணபிரான் உபதேசித்தருளியபடி பிரபஞ்ச பேதமெல்லாம் இன்பாகாரமாகத் தோன்ற நான் நீ என்னும் வேற்றுமையின்றி ஸர்வ சொரூபனாய்த் தானே தானாய், **அறிவாகாரமாய்** விளங்குவன். இவற்றை விரிப்பிற் பெருகுமென்றெண்ணி இவ்வளவிற் சுருக்கிப் பூர்த்திசெய்து, மேல் வைஷ்ணவர்களுக்குரிய **திரு அஷ்டாக்ஷர மந்த்ரார்த்தத்தை**யும் அவர்கள் சாஸ்திரங்களிற் சொன்னபடி நடுவுநிலை திறம்பாது ஸங்க்ரஹமாகக் கூறுவாம்.

அன்பைப் பெருக்கியென் னாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே யிறையே பராபரமே.

---

ஸ்ரீ

பரப்ரஹ்மணே நம:

# திரு அஷ்டாக்ஷர விளக்கம்.

## யஜுர் வேத நாராய ணோப நிஷத்

ஓமித்யக்ரே வ்யாஹரேத் நமஇதி பஸ்சாத்
நாராய ணாயேத் யுபரிஷ்டாத்
ஓமித் யேகாக்ஷரம் நமஇதி த்வே அக்ஷரே
நாராய ணாயேதி பஞ்சாக்ஷராணி
ஏதத்வை நாராயணஸ் யாஷ்டாக்ஷரம்பதம்.

(இ - ள்) ஓம் என்று முதலில் சொல்லுக. பின் நம என்றும், அதற்குப்பின் நாராயணாய என்றும் உச்சரிக்க. ஓமென்னும்பிரணவம் ஓரெழுத்து.நம என்பதுஇரண்டெழுத்து. நாராயணாய என்பது ஐந்தெழுத்து. இதுதான் நாராயண அஷ்டாக்ஷர வாக்கியம்.

## யஜுர்வேத தார ஸாரோப நிஷத்

ஓம் நமோ நாராயணா யேதி தாரகம்
சிதாத் மக மித் யுபாஸிதவ்யம்.

(இ - ள்) ஓம் நமோ நாராயணாய என்னுந்தாரகம் சிதாத்மகமானது. அது உபதேசிக்கத்தக்கது.

மேலே உதஹரித்த சுருதிப் பிரமாணப்படி ஓம் நமோ **நாராயணுய** என்பதுவே திரு அஷ்டாக்ஷரமந்த்ர மென்று சொல்லப்படும். இது முமுக்ஷு அறியவேண்டிய முக்கிய மான ரஹஸ்யங்கள் மூன்றனுளொன்று. இதுவே முதல் ரஹஸ்யம். இதை **ஸ்ரீ**மந் நாராயணனே பதரிகாஸ்ரமத்தில் ஆசாரியனுயும் சிஷ்யனுயும் அவதரித்து, ஆசாரியன் சிஷ்யன் ஆகிய இருவரும் அநுஷ்டிக்க வேண்டிய முறைமைகளைத் தாமே நடாத்திக்காட்டிச் சிஷ்யனுகிய நானுக்கு உபதேசித்த திருமந்திரமாம். இது தன்னை மிக்க பயபக்தியோடு ஜபிக் கின்றவர்களுடைய அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களைப் பூர்த்தி செய்யும் பேராற்றல் வகித்தது. இதன் வ்யாக் யானமே ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள். இம்மந்த்ரம் ஓம் என்னும் பிரணவத்துக்கு வ்யாக் யானமாயுள்ளது. இது எட்டிழையாய் மூன்று சரடாயிருக் கும் ஒருமங்கள ஸூத்திரம்போல் எட்டு அக்ஷரமாயும் மூன்று பதமாயு முள்ளது.

இதன் எட்டு அக்ஷரங்களாவன:—ஓம் நமஃ நா ரா ய ணு ய.

இதன் மூன்று பதங்களாவன:—ஓம், நமஃ, நாராயணுய.

இதனுல் ஓம் என்ற பிரணவத்தை முதலாகவும், நமஃ என்ற பதத்தை இரண்டாவதாகவும், நாராயணுய என்ற பதத்தை அதற்குப் பின்னுகவும் உச்சரிக்கவேண்டியது ஆவசியகம். இத்திருமந்த்ரம் ஓம் என்ற அக்ஷரத்தோடு எட்

ஸ்ரீ

பரப்ரஹ்மணே நமஃ

# திரு அஷ்டாக்ஷர விளக்கம்.

### யஜுர் வேத நாராயணோப நிஷத்

ஓமித்யக்ரே வ்யாஹரேத் நமஇதி பஸ்சாத்
நாராயணாயேத் யுபரிஷ்டாத்
ஓமித் யேகாக்ஷரம் நமஇதி த்வே அக்ஷரே
நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி
ஏதத்வை நாராயணஸ் யாஷ்டாக்ஷரம்பதம்.

(இ - ள்) ஓம் என்று முதலில் சொல்லுக. பின் நம என்றும், அதற்குப்பின் நாராயணாய என்றும் உச்சரிக்க. ஓமென்னும்பிரணவம் ஒரெழுத்து. நம என்பதுஇரண்டெழுத்து. நாராயணாய என்பது ஐந்தெழுத்து. இதுதான் நாராயண அஷ்டாக்ஷர வாக்கியம்.

### யஜுர்வேத தார ஸாரோப நிஷத்

ஓம் நமோ நாராயணா யேதி தாரகம்
சிதாத் மக மித் யுபாஸிதவ்யம்.

(இ - ள்) ஓம் நமோ நாராயணாய என்னுந்தாரகம் சிதாத்மகமானது. அது உபதேசிக்கத்தக்கது.

மேலே உதஹரித்த சுருதிப் பிரமாணப்படி ஓம் நமோ நாராயணுய என்பதுவே திரு அஷ்டாக்ஷரமந்த்ர மென்று சொல்லப்படும். இது முமுக்ஷு அறியவேண்டிய முக்கிய மான ரஹஸ்யங்கள் மூன்றனுளொன்று. இதுவே முதல் ரஹஸ்யம். இதை ஸ்ரீமந் நாராயணனே பதரிகாஶ்ரமத்தில் ஆசாரியனுயும் சிஷ்யனுயும் அவதரித்து, ஆசாரியன் சிஷ்யன் ஆகிய இருவரும் அநுஷ்டிக்ச வேண்டிய முறைமைகளைத் தாமே நடாத்திக்காட்டிச் சிஷ்யனுகிய நரனுக்கு உபதேசித்த திருமந்திரமாம். இது தன்னை மிக்க பயபக்தியோடு ஜபிக் கின்றவர்களுடைய அநிஷ்டங்களைப் போக்கி இஷ்டங்களைப் பூர்த்தி செய்யும் பேராற்றல் வகித்தது. இதன் வ்யாக் யானமே ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள். இம்மந்த்ரம் ஓம் என்னும் பிரணவத்துக்கு வ்யாக் யான மாயுள்ளது. இது எட்டிழையாய் மூன்று சரடாயிருக் கும் ஒருமங்கள ஸூத்திரம்போல் எட்டு அக்ஷரமாயும் மூன்று பதமாயு முள்ளது.

இதன் எட்டு அக்ஷரங்களாவன:—ஓம் நம: நா ரா ய ணு ய.

இதன் மூன்று பதங்களாவன:—ஓம், நம:, நாராயணுய.

இதனுல் ஓம் என்ற பிரணவத்தை முதலாகவும், நம: என்ற பதத்தை இரண்டாவதாகவும், நாராயணுய என்ற பதத்தை அதற்குப் பின்னுகவும் உச்சரிக்கவேண்டியது ஆவசியகம். இத்திருமந்த்ரம் ஓம் என்ற அக்ஷரத்தோடு எட்

டக்ஷரங்களாகக் கணக்கிடப் பட்டிருக்கின்றமையால் பிரண வத்தை நீக்கி உபதேசித்தல் பொருத்தமின்று. ஸூத்ரர் களுக்குப் பிரணவத்தைச் சொல்லக்கூடாதென்று சில அழுக் காறுடைய ப்ராஹ்மணர்கள் கூறுவது ஸ்வரமில்லாமல் உப தேசிக்கவேண்டுமென்பதே கருத்தாகும். பிரணவத்துக்குரிய நான்கு மாத்திரைகளுள் மூன்று மாத்திரைகளோடு ஜபிக்க வேண்டு மென்பதேவிதி. "மூலமாகிய வொற்றை யெழுத்தை மூன்று மாத்திரை யுள்ளெழ வாங்கி-வேலை வண்ணனை மேவு திராகில் விண்ணகத்தினு மேவலுமாமே." என்ற பெரியாழ் வாருடைய ஸ்ரீ ஸூக்தியே இதற்குச் சான்றாம். வேளாளர் களை ஸூத்ரர்களென்று கூறுவது அறிவின்மை.

## அதர்வ ஶிகோப நிஷத்

த்ரிருக்த்வா சதுர்த்த ஶ்ஶாந்த ஆத்மா
ப்லுத ப்ரணவ யோகேந ஸமஸ்த மோமிதி
ப்ரயுக்த ஆத்ம ஜ்யோதிஸ் ஸக்ருதா வர்த்தே.

(இ - ள்) மூன்று முறை யுச்சரித்து நான்காமுறையில் சாந்த னான ஆத்மா ப்லுதப்ரணவ யோகத்தால் எல்லாம் ப்ரண வமேயென அறிந்தபொழுது ஆத்ம ஜ்யோதிஸ் ஸானது ஒரு முறை ஆவர்த்திக் கின்றது.

இது தான் பிரணவோ பாஸ்தியின் லக்ஷணம். இதன் விரிவை எமது ஓங்கார விளக்கத்திலறிக. **ப்லுத ப்ரணவம்-** மாத்திரை விர்த்தியடைந்த பிரணவம். அதாவது சுத்த நாத

ஸ்வரூபம். அவ்விஷயமான யோகமென்றால் தாரக யோகமென்று பொருள்.

நிற்க, முதற்பதமான ஓம் என்னும் பிரணவம் - அ உ ம என்னும் மூன்று அக்ஷரங்களின் சேர்க்கையாலுண்டானது. இதில் முதல்அக்ஷரமான அகாரம்—ஸகல ஜகத்திற்குங் காரணரான ஸ்ரீமந் நாராயணனையே குறிக்கும். அவனே ஸகல ஜகத்பூஜ்யன். ஸர்வரக்ஷகன், ஸமஸ்த கல்யாணகுணன். ஸ்ரீயஃபதி. இரண்டாம் அக்ஷரமான உகாரம்—ஏவகாரப் பொருளைக் குறிக்கும். அதாவது நாராயணனுக்கே பாதந்திரனாயிருக்கை. தனக்கென ஓர் ஸ்வதந்த்ரமு மில்லாதிருத்தல். எனவே, அந்நிய சேஷத்வ நிவிருத்தியும் பகவதநந்நிய சேஷத்வமும் அதற்குப் பொருள். "மறந்தும் புறந்தொழா மாந்தர்" என் கையாலே பகவத் சேஷத்வத்திலும் அந்நிய சேஷத்வங்கழிகையே பிரதானம் என்றார் பிள்ளை லோகாசாரியர். மூன்றாமக்ஷரமான மகாரம் - ஜீவாத்மாவைக் குறிக்கும். ஜீவாத்மா ஞானத்தையே ரூபமாகவும், குணமாகவும் உடையவன். இருபத்தைந்தாம் அக்ஷரமாயுமுள்ளவன்.

இங்ஙனங் கூறிப் போந்த அ உ ம என்னும் * அக்ஷர த்ரயங்களின் அர்த்தத்தால் பிரபஞ்சத்திலுள்ள ஸர்வ ஜீவாத்மாக்களும் ஸகல ஜகஜ்ஜந்மாதி காரணனும், ரக்ஷகனுமான ஸ்ரீமந்

* இவ்வக்ஷரங்களுக்குப் பஞ்சாக்ஷரத்தில் வேறு பொருள் கூறப்பட்டுள்ளது. அதை ஆங்கு காண்க.

நாராயணனுக்கே அடிமையாயுள்ளார்களென்பது பெறப்பட்டது.

இனி இரண்டாவதுபதமான நமః என்பது-இரண்டக்ஷரமாயிருக்கின்றது. அது ந மః என்பதே. இது பிரணவத்திலுள்ளசேஷத்வத்தையே விரித்துக் கூறுகின்றது. மః என்றால் எனக்கு என்று பொருள். அதாவது நானே ஸ்வதந்தரன். ந என்றால் அப்படியல்லவென்றர்த்தம். அதாவது எனக்குரியனல்லன் என்கிற நீக்கத்தை அது உணர்த்துகின்றது. இவ்விரண்டுஞ் சேர்ந்த நமః என்ற பதத்திற்கு—நான் ஸ்வதந்தரனன்று—ஸ்ரீமந் நாராயணனுக்கேஅடிமையானவன்—நான் அடையவேண்டியபலன்களனைத்திற்கும்அவனே காரணன்—என்னுடைய அநிஷ்டங்களைப் போக்கி வேண்டிய இஷ்டங்களைப் பூர்த்தி செய்து ரக்ஷிக்கின்றவனும் அவனே—என்று தாற்பர்யம். இதனாலே அஹங்கார மமகார நீக்கமும், ஸ்வதந்தர ஹீனமும், பாரதந்திர ஸ்வரூபமும் விளங்கா நின்றது.

இனி மூன்றாவது பதமான நாராயணாய என்பது - நார அயண, ஆய என மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நார என்ற சொற்குப் பொருள் யாதெனின், ரః என்றால் அழியும் பொருள். அது அநித்யமான வஸ்து. ந என்றால் இல்லையென்றர்த்தம். இவ்விரண்டுஞ் சேர்ந்த நரః, என்ற சொல்லுக்கு அழியாத பொருள், நித்தியமான வஸ்து என்றர்த்தம். இவ்வஸ்துக்களின் கூட்டமே நாராః என்று சொல்லப்படும். இக்கூட்டங்கள் பலவாதலின் நாராః என்று

படிக்கப்பட்டது. அக்கூட்டங்களாவன—ஜ்ஞாநாநந்த அமலத்வாதிகள், ஜ்ஞாநசக்தியாதிகள், வாத்ஸல்ய ஸௌஸீல்யாதிகள், மங்களத்திருமேனி, காந்தி, ஸௌகுமார்யாதிகள், திவ்ய பூஷணங்கள், திவ்யாயுதங்கள், பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்கள், நித்ய ஸூரிகள், சத்ர சாமராதிகள், திருவாசல் காக்கும் முதலிகள், கணதிபர்கள், முக்தர்கள், பரமாகாசம், ப்ரகிருதி, பத்தாத்மாக்கள், காலம், மஹதாதி தத்வங்கள், அண்டங்கள், அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களாம்.

**அயன** என்ற சொற்குப் பொருள் யாதெனின், மேற்சொன்ன கூட்டங்கள் எல்லாவற்றையும் ஆஸ்ரயமாக வுடையவன் என்பதாம். அதாவது, அவைகளைத் தன்னுள்ளே வைத்துக்கொண்டு அவற்றிற்குத் தான் ஆதாரமாயிருந்து ரக்ஷிப்பவன் என்றர்த்தம். அன்றியும் ஸகல வஸ்துக்களைக் காட்டிலும் தான் பெரியவன் என்றும் பொருள். அதுதான் ப்ரஹ்மம்.

**ஆய** என்ற சொற்குப் பொருள் யாதெனின், எல்லாவித கைங்கர்யங்களையுஞ் செய்யவேண்டுமென்பதாம்.

இவ்வாறு திரு அஷ்டாக்ஷரத்துக்குப் பொருள் ஸங்க்ரஹமாகக் கூறப்பட்டது. அதாவது, (ஓம்) அகார வாச்சியனை ஸ்ரீமந் நாராயணனுக்கே உரியவனான நான், (நம:) எனக்குரியனன்றி, (நாரா:) ஸகல சேதனை சேதன வஸ்துக்களுக்கும், (அயன) ஆஸ்ரயனான நாராயணனுக்கே, (ஆய) ஸர்வவித

கைங்கர்யங்களையும் ஸர்வதேச, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளி லும் செய்யக்கடவனாகின்றேன் என்பதாம். அன்றியும், பிரமன் முதல் எறும்பீறாயுள்ள ஸர்வ ஜீவராசிகளுக்கும் ஸ்ரீமந் நாராயணனே தாரகமாயிருப்பதால் மோக்ஷத்துக்கு உபாயமும் அவனே யென்றுணரற்பாற்று.

## த்வய ரஹஸ்ய விளக்கம்

இரண்டாவது ரஹஸ்யம் த்வயம் என்று சொல்லப்படும். இம்மந்திரத்தை விஷ்ணு மூர்த்தி தன் பத்நியாகிய லக்ஷ்மி தேவிக்கு ஆதியில் உபதேசித்தனர். இதுதான்

**ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே**
**ஸ்ரீமதே நாராயணாய நமஃ**

என்பதாம்.

இம்மந்த்ரம் இரண்டு வாக்கியமாயிருப்பதால் த்வயம் என்று சொல்லப்படும். இது இருபத்தைந்து அக்ஷரமாய்ப் பூர்வ வாக்கியம், உத்தர வாக்கியம் என இருவகைப்படும். இதில் பூர்வ வாக்கியம் பதினைந்து அக்ஷரம். உத்தர வாக்கியம் பத்து அக்ஷரம். இவ்விரண்டு வாக்கியங்களும் பத்தர்த்தங்களைக் கொண்டு விளங்குகின்றன. பூர்வ வாக்கியத்திலுள்ள ஸ்ரீ என்னுஞ் சொல் பெரிய பிராட்டியினுடைய திருநாமமாய் விளங்கும். இப்பிராட்டியார் புருஷாகாரமானாலல்லது ஸ்ரீமந் நாராயணன் எக்காரியமுஞ் செய்யான். ஆத்மாக்கள் அவ் வெம்பெருமானுடைய திருவடிகளை ஆஸ்ரயிக்கும்போது

அவன் அவர்களுடைய மாட்டாமையைக் கண்டு கோபித்துக் கொள்ளாதபடி அவர்களை ரக்ஷிக்கும்பொருட்டுப் பெரிய பிராட்டியார் என்னும் லக்ஷ்மி தேவி ஆத்மாக்களாலே ஆஶ்ரயிக்கப்படுகின்றாள். அவளும் ஆத்மாக்களுடைய ரக்ஷணத்துக்காகவே எம்பெருமானை ஆஶ்ரயிக்கின்றாள்,

மத்—என்னுஞ்சொல் எம்பெருமானும் லக்ஷ்மியும் சூரியனும் கிரணமும் போலவும், புஷ்பமும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும் எப்பொழுதும் அநந்யமாய்க் கூடியிருக்கும் நித்ய ஸம்பந்தத்தைக் குறிக்கின்றது.

நாராயண—என்னும் பதம் ஸமஸ்த கல்யாணகுணங்களையுடையவனும், ஸர்வ ரக்ஷகனும், ஸர்வ ஸ்வாமியுமானவனுமான ஸ்ரீமந் நாராயணனைக் குறிக்கின்றது.

சரணௌ—என்னும் பதம் திருவடிகளைக்குறிக்கின்றது.

ஶரணம்—என்னும் பதம் உபாயமாக (காரணமாக) என்பதைக் குறிக்கின்றது.

ப்ரபத்யே—என்னும் பதம் அடைகின்றேன் (பற்றுகிறேன்) என்பதைக் குறிக்கின்றது. இது நிகழ்காலச்சொல்லாதலின் பேறடைவதற்கு எப்பொழுதும் ஆஶ்ரயிக்கலாம் என்பது பொருள். உலகத்தில் எப்படிப்பட்ட குற்றங்களிழைத்தாலும் காலில் விழுந்தவுடனே பெரியோர்கள் அக்குற்றங்களை க்ஷமித்துக் காப்பாற்றுவதுபோல் திருவடிகளும் அடைந்த ஆத்மாக்களை நழுவவிடாது காப்பாற்றும் என்பது

அர்த்தம். அன்றியும், திருவடி என்றதற்கு ஆசாரியன் என்னும் பொருள் கொண்டு எம்பெருமானை ஆஸ்ரயித்தால் ஒரு வேளை பல ப்ராப்தியில் ஸம்ஸயமானாலும் பகவத் பக்தர்களும், ஆஸ்ரித பரதந்திரர்களுமான ஆசார்யர்களை ஆஸ்ரயித்தால் யாதொரு சந்தேகமுமில்லை என்று வைஷ்ணவ சித்தாந்தம் ஆசார்யாபிமானத்தை வற்புறுத்தும்.

இனி உத்தர வாக்கியத்தினுள்ள பொருள் வருமாறு:— பூர்வ வாக்கியத்தில் சொல்லப்பட்ட பெரிய பிராட்டியாரோடு அநந்நியமாயிருக்கிற நாராயணனுடைய திருவடிகளை உபாயமாகப் பற்றின் ஆத்மாவுக்குத் தான் அடையவேண்டிய பேறுகளைக் கருதாது எப்பொழுதும் அவனுடைய திருவடிகளில் பக்தியோடு செய்யுங் கைங்கர்யமே முக்கியமாதலின் அந்தக் கைங்கர்யப் பேற்றையே சொல்லுகிறது அவ்வாக்கியம். அதாவது,

**ஸ்ரீமதே**—பெரிய பிராட்டியாரோடு அநந்நியமாய்க் கூடிக்கொண்டிருக்கின்ற,

**நாராயணாய**—ஸ்மஸ்த கல்யாண குணங்களோடு கூடிய ஸ்ரீமந் நாராயணனுக்கு எல்லாவகையானுங் கைங்கர்யஞ் செய்யக் கடவேனாக.

**நமஃ**—எனக்கில்லை.

இவ்வாறு த்வயத்துக்குப் பொருள் கூறப்படுகின்றது. இதனால் பூர்வ வாக்கியத்தில் ஆத்மாக்களுடைய மாட்டாமை

யைக் கண்டு அவரவர் செய்த அபராதங்களையெல்லாம் க்ஷமித்து ரக்ஷிப்பதற்காக லக்ஷ்மி புருஷாகாரமாயிருப்பதனுல் அந்த லக்ஷ்மியோடு நித்தியமாய்க் கூடிக்கொண்டிருக்கின்ற ஸகல கல்யாண குணங்களையுடைய நாராயணனது திருவடிகளையே உபாயமாகப் பற்றுகிறேன் எனவும், உத்தர வாக்கியத்தில் அப்படிப் பற்றினதற்குப் பேறு அந்த லக்ஷ்மியோடு அநந்நியமாய்க் கூடியுள்ள நாராயணனுடைய திருவடிகளில் யாதொரு பலத்தையும் உத்தேசியாமல் எல்லாப் பிரகாரத்தாலும் இடையருவன்போடு கைங்கர்யங்களையே செய்யக்கடவேன் எனவும் பெறப்பட்டது.

## சரமஶ்லோக விளக்கம்.

மூன்ருவது ரஹஸ்யம் சரமஶ்லோகம் என்று சொல்லப்படும். இது பகவத்கீதையில் பதினெட்டாவது அத்தியாயத்திலுள்ளது. இதைக் கிருஷ்ணபகவான் அர்ஜ்ஜுனனுக்குத் தேர்த்தட்டில் உபதேசித்தனர். இதுதான்,

**ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் விரஜ அஹம்த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச:**

என்பதாம்.

அர்ஜ்ஜுனன் கிருஷ்ணரைப் பார்த்து, ஓ ஸ்வாமி! நான் சஞ்சலமான மனதையுடையவனுயிருக்க, எனக்கேன் இந்தக் கடினமான மார்க்கங்களை யுபதேசிக்கின்றீர். இவற்றைச் செய்ய வெகுகாலம் வேண்டும். அப்படிச் செய்தாலும் சேஷத்வ பார தந்திரியங்களாகிற ஸ்வரூபத்திற்கு விரோத

மாகையால் இவற்றை யநுஷ்டித்து எம்பெருமானை யடைதல் வெகு துர்லபம் என்று கூற, அப்போது பகவான் அப்படியாகில், பரம ரஹஸ்யமாயிருக்கிறதொன்றை உபதேசிக்கிறேன் என்று சொல்லி சரமோபாயமான—அதாவது கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி என்னும் நான்கனுள்—கடைசி உபாயமான ப்ரபத்தியை அவனுக்கு உபதேசித்தனர். ஆதலால் அதற்குச் சரமஸ்லோகமென்று பெயராயிற்று.

இம்மந்த்ரம் முப்பத்திரண்டு அக்ஷரமாய், பதினொரு பதமாய், இரண்டு வாக்கியமாயிருக்கின்றது. இதன் அர்த்தம் வருமாறு:—

ஸர்வ – ஸமஸ்தமான; தர்மாந் – தர்மங்களை, அதாவது, ஶ்ருதி, ஸ்மிருதிகளில் மோக்ஷோபாயங்களாகச் சொல்லப்பட்ட கர்ம, ஞான, பக்தியோக முதலியவற்றையும், அவற்றிற்கு அங்கமானவற்றையும்; பரித்யஜ்ய – நன்றாகவிட்டு; மாம் ஏகம் – என்னொருவனையே; ஶரணம் – உபாயமாக; வ்ரஜ – அடையக்கடவாய்; அஹம் – நான்; த்வா – உன்னை; ஸர்வபாபேப்ய – எல்லாப் பாவங்களினின்றும்; மோக்ஷயிஷ்யாமி – விடுபட்டவனாகச் செய்யக் கடவேன்; மாசுச:- நீபயப்படாதே என்பதாம்.

இவ்வாறு சரமஶ்லோகத்திற்குப் பொருள் கூறப்படுகின்றது. இதனாலறியக்கிடக்கின்ற உண்மை யென்னெனின்! கர்ம முதலிய உபாயங்களை முற்றுந்தவிர்த்து, அவ்வழிகளிற்

செல்லாமல் ஸர்வக்ஞனாயும், ஸமஸ்த கல்யாண குண பரி பூரணனாயும், ஸர்வசக்தனாயும், அவாப்த ஸமஸ்த காமனாயு முள்ள ஸ்ரீயஃபதியான நாராயணனுடைய திருவடிகளையே திரிகரணங்களாலுந் தஞ்சமாக அடையின், அவன் கருணை மேலீட்டால் ஆத்மாக்களுடைய ஸர்வபாபங்களையும் நிர் மூலப் படுத்தி, ப்ரகிருதியினின்றும் விடுவித்து, முக்தனாக்கி ரக்ஷிக் கின்றான். அதுவிஷயத்தில் பயப்படவேண்டியதில்லை. என் பதாம்.

இனி இம்மந்த்ரத்திரயங்களாற் சொல்லப்படுகிற அர்த்த பஞ்சக ஞானத்தையு மறிந்து கொண்டால் மோக்ஷம் எளிதி லடையக் கூடுமாதலின் அதனையும்ஸங்க்ரஹமாக விளக்குவாம்.

## அர்த்த பஞ்சக ஞான விளக்கம்.

(க) **ஸ்வஸ்வரூபம்** - ஞானரூபனும், ஞானத்தைக் குண மாக வுடையவனும், ஸ்ரீயஃபதியான நாராயணனுக்கே சேஷ பூதனும், பாரதந்திரனுமாயுள்ளவன் ஆத்மா. அதுதான் ஆத்ம ஸ்வரூபம். அது நித்யர், முக்தர், பத்தர் கேவலர், முமூக்ஷு என ஐந்தாம்.

(உ) **பரஸ்வரூபம்** - பகவத் ஸ்வரூபம். அது பரத்வம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என ஐந்தாம்.

(ங) **புருஷார்த்த ஸ்வரூபம்** - கைங்கர்ய ரூபம. அது புருஷனாலே அர்த்திக்கப்படுகிற தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், பகவதநுபவம் என ஐந்தாம்.

(௪) உபாய ஸ்வரூபம் - ஸாதனம். அது கர்மம், ஜ்ஞானம், பக்தி, ப்ரபத்தி, ஆசார்யாபிமானம் என ஐந்தாம்.

(௫) விரோதி ஸ்வரூபம் - அது ஸ்வரூபவிரோதி, பரத்வ விரோதி, புருஷார்த்த விரோதி, உபாய விரோதி, ப்ராப்தி விரோதி என ஐந்தாம்.

இவற்றின் விரிவையெல்லாம் பெரிய கிரந்தங்களிற் காண்க. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

**நவஸம்பந்த விளக்கம்.**

அல்லாமலும், திருமந்த்ரத்தால் எம்பெருமானுக்கும் ஜீவர்களுக்கும் பெறக்கடவனவாய ஸம்பந்தங்கள் ஒன்பது. அவையாவன—**அகாரத்தில்** ஸம்பந்தம் மூன்று (௩) அது பிதா புத்ர ஸம்பந்தம், **அவ ரக்ஷணே** என்றதாதுவினால் ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தம், **லுப்த சதுர்த்தியால்** சேஷி சேஷ ஸம்பந்தம். **உகாரத்தில்** ஸம்பந்தம் (௧). அது பர்த்ரு பார்யா ஸம்பந்தம். **மகாரத்தில்** ஸம்பந்தம் (௧). அது ஜ்ஞாத்ரு ஜ்ஞேயசம்பந்தம். **நமஸ்ஸில்** ஸம்பந்தம் (௧). அது ஸ்வஸ்வாமி ஸம்பந்தம் அது **நார** பதத்தில் ஸம்பந்தம் (௧) அது ஶரீரி ஶரீர ஸம்பந்தம். **அயன்** பதத்தில் ஸம்பந்தம் (௧). அது ஆதார ஆதேய ஸம்பந்தம். **ஆய** பதத்தில் ஸம்பந்தம் (௧) அது போக்த்ருத்வ போக்யத்வ ஸம்பந்தம். இவ்வாறு பெறப்பட்ட நவவித ஸம்பந்தங்களையு முணர்ந்து அவற்றால் ஸ்ரீமந் நாராயணனே மோக்ஷத்துக்கு உபாய மென்றறிய வேண்டியது.

இவற்றைத்தான் ரஹஸ்யத்திரயம் பிரதி பாதிக்கின்றது. இவைகளே ஸகல வேதஸாரம். இந்த ரஹஸியத்திரயங்கள் மூன்றிடத்தில் உபதேசிக்கப்பட்ட படியாலும், திருமந்த்ரத்துக்குத் த்வயம் வியாக்கியானமாயும், த்வயத்துக்கு சரமஶ்லோகம் வியாக்கியானமாயும் இருப்பதனாலும், இம்மூன்றையுஞ் சேர்த்தே ஆசாரியன் சிஷ்யனுக்கு உபதேசிக்கவேண்டும். இவற்றையே ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்க நாச்சியாருக்கு உபதேசிக்க அவ்வம்மையார் சேனை முதலிகளுக்கு உபதேசிக்க, அவர் நம்மாழ்வாருக்கு உபதேசிக்க, அவர்வழியாக இவ்விரஹஸியங்கள் உபதேச பரம்பரையாய் வந்து உலகத்தாரை உஜ்ஜீவித்து வருகின்றன.

**ஸ்ரீ வைஷ்ணவர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள்.**

மேற்சொன்ன மந்த்ரத்திரயங்களை நித்தியாவர்த்தனஞ் செய்து வரும்போது முமூக்ஷு கவனிக்கவேண்டிய மற்றுமுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:—

(௧) இதர தேவதைகளைக் கலந்து விதித்திருக்கின்ற கர்மங்களை விட்டு விடவேண்டும்.

(௨) எவன் ஸ்ரீ ஹரியைப் பஜிக்கிறானோ அவன் ஶூத்ரனாயினும் ப்ராஹ்மணனாகின்றான்.

(௩) முக்கியமாய் விதி சிவன் அக்நி முதலிய இதர தேவதைகளைப் பூசிக்கின்றவன் ஶூத்ரன். (அத்தேவர்கள் அஹங்கார யுக்த ஜீவர்கள்).

(௪) அந்தத் தேவர்களுக்கு அந்தர்யாமியான ஸ்ரீமந் நாராயணனைத் தொழுதாலும் ப்ரபந்ந ஆஸ்ரமங் குலைந்து போம்.

(௫) ஸ்ரீ வைஷ்ணவர்களே சுத்த ஸாத்வீகர்கள்.

(௬) பகவத் சேஷத்வத்தைப்பார்க்கிலும் அந்நிய சேஷத்வங் கழிகையே ப்ரதானம்.

(௭) எம்பெருமானை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிப்பதைவிட ஆசார்யனை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிப்பது சுலடம்.

இவைகளே வைஷ்ணவ மந்த்ர ரஹஸ்யங்களின் முக்கிய கொள்கைகளாம். இவற்றின் விரிவெல்லாம் அஷ்டாதஶரஹஸ்ய முதலிய விரிந்த நூல்களிலுள்ளன. அவற்றைப் பொருள், புகழ், அடிமை விரும்பாத ஆசார்யனை முறைமையோடு வழி பட்டுத் தெரிந்து கொள்க.

---

## முடிபுரை.

இதுவரையும் யாம் கூறிவந்த ஸங்க்ரஹத்தின் ஸாராம்சம் யாதெனின்! சைவ சித்தாந்தத்தில் அன்பும் ஞானமுமே வீட்டு நெறிக்கு முக்கிய ஹேது. வைஷ்ணவத்தில் ப்ரபத்தி பொன்றே அந்நெறிக்கு நேர் வாயில். சைவபஞ்சாக்ஷரத்தில் ஆன்மாவை அநாதியே பற்றியுள்ள மும்மலப்பற்று அகல வேண்டுமாயின், அத்தகையப் பற்றற்ற சிவத்தை அருள்வாயி

லாகப்பற்றி அவனருளில் நிறைந்து அறிவாகாரமாய் நிற்பின், ஆன்மாவை விடாது பற்றிவந்த பற்று விட்டொழியும், அப்பொழுதே வீடுங் கைகூடும் என்பதாம். வைஷ்ணவ அஷ்டாக்ஷரத்தில் எல்லாத் தர்மங்களையும் ருசிவாசனையோடு விட்டு விட்டு ஸ்ரீமந் நாராயணனையே சரணுகதி யடைந்தால் அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுவித்து மோக்ஷத்தையடையும்படிச் செய்வான் என்பதாம். இவ்விரண்டினியல்பையும் கூர்த்தமதிகொண்டு பரியாலோசனை செய்யின் இறுதியில் முடிபு ஒன்ருகவே விளங்குமென்பது வெளிப்படை. அஃதெவ்வாறெனின் சுருக்கமாய்க் கூறுதும்:—

சாஸ்திரங்களில் மர்க்கடசம்பந்தமெனவும், மார்ஜ்ஜால சம்பந்தமெனவும் இரண்டு சம்பந்தங்கள் கூறப்பட்டுள்ளன. மர்க்கடசம்பந்தமாவது—குரங்கு தன் குட்டியைத் தான் தேடுவதில்லை. தேடாமலிருக்கவும் குட்டி தன் தாயை விடாமல் வயிற்றைக் கட்டிப் பிடித்துக்கொண்டு திரிதல் போல்வது. மார்ஜ்ஜால சம்பந்தமாவது—பூனைக்குட்டி தன் தாயைத் தேடுவதில்லை. அப்படித் தேடாமலிருந்தும் தாய்ப்பூனை தானே வலிய வந்து குட்டியைத் தேடி அதைவிடாமல் கௌவிக்கொண்டு திரிதல் போல்வது. இவ்விரண்டனுள் வைஷ்ணவ சமயம் மர்க்கடப் பிடியைப்போல் எவ்வித சாதனங்களையுங் கவனியாது ஸ்ரீமந் நாராயணனையே உபாயமாக வடைந்தால் முக்தியை யடையச் செய்வது அவன் பொருப்பென்றும், அம்முக்தியை ஜீவான்மா தேடவேண்டியதில்லை

யென்றுங் கூறும். சைவ சித்தாந்தமோ இறைவனிடத்தில் பக்தி செலுத்தி அவனருளைத் துணையாகக் கொண்டு தத்துவ தாத்வீகங்களை ஒவ்வொன்ருக நீத்து, அவனுந் தானுமாய் நின்ருல் அவனே இவனுக்கு இவனது பரிபாகத்தை நோக்கி வீட்டை யளிப்பானென்று பகரும். இதனுல் வைஷ்ணவ சமயத்துக்கு மர்க்கட சம்பந்தம் ஒன்றே ஆவசியகம். சைவ சித்தாந்தத்துக்கு இரண்டுமே இன்றியமையாதது. இவ்வுண்மையை அடியில் வரும் பிரபல பிரமாணங்களைச் சித்தசமாதானத்தோ டாராய்ந்து சிந்தித்துத் தெளிக.

## திருக்குறள்

பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

## திருமந்திரம்

பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே.

நமவற வாதி நாடுவ தன்ரும்
சிவமாகு மாமோனஞ் சேர்தன்மெய் வீடே.

பசுத்தன்மை நீக்கியப் பாச மறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.

பற்றறப் பற்றில் *பரம்பர மாமே.

திருவாய்மொழி

அற்றது பற்றெனின், உற்றது வீடு.

நன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த், தொன்றாய்க்கிடந்த வரும்பெரும்பா ழுலப்பிலதனை யுணர்ந் துணர்ந்து, சென்றாங் கின்பதுன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால், அன்றே அப்போதேவீடு அதுவேவீடுவீடாமே.

அமரர்தொழப் படுவானை யனைத்துலகுக் கும்பிரானை
அமரமனத்தினுள் யோகுபுணர்ந் தவன்றன்னோ டொன்றாக
அமரத்துணிய வல்லார்க ளொழிய அல்லாதவரெல்லாம்
அமரநினைந் தெழுந்தாடி யலற்றுவதே கருமமே.

உணக்குமின் பசையற அவனுடை யுணர்வுகொண் டுணர்ந்தே.

பின்னெறிக் கொண்டநெஞ்சனாய்ப் பிறவித் துயர்க்கடந்தே.

ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி
வழுவிலா வடிமைசெய்ய வேண்டும் நாம்.

தாயுமானவர்

பற்ற தாயின் பரசுகம் பற்றுமே.

என்னைப் புரப்பதரு ளின்கடனா மென்கடனும்
நின்னிற் பணியறவே நிற்கை பராபரமே.

---

*பரம் பரமாம்—ஆன்மா சிவமாம்.

மேற்சொன்ன பிரமாணங்களால் சைவ வைஷ்ணவ நன்னெறிகளின் முழுநோக்கம் நன்கு விகசிதமாயிற்றன்றோ! சமயத்தினிடத்துப் பற்றுண்டாகும் பொருட்டே பின்வந்த ஆசிரியன்மார்கள் தத்தஞ்சமய நூற்களில் தம்மறிவினியல்புக்கேற்ப மதாபிமானத்தால் கடுஞ் சொற்களைப் புகுத்திவைத்துள்ளார்கள். ஆதலால், அவற்றை அறவே களைந்தெறிந்துவிட்டு, சமய நூற்களிற்கூறியுள்ள தெய்வமணம் பொருந்திய ஸாராம்ஸங்களை மாத்திரங் கடைப்பிடித்து, ஞானப்பற்றென்றே உயிர்க்குறுதியைத் தருமென மேற்கொண்டு, இழிபு பொருந்திய ஜாதி, குலம், பிறப்பு என்னுமிக் கோணல்களை முற்றுந் தவிர்த்து, எல்லாச் சீவர்களிடத்தும் அன்புபாராட்டி, அவரவர்களுடைய பக்குவத்துக்கேற்ப அவரவர்கள் அந்தந்த நெறியிலே நிற்கின்றார்களென மகிழ்ந்து, தொழுந்தெய்வமெல்லாம் முடிவில் ஒரே தெய்வத்தின் விளக்கமெனத் தீர்மானித்து, பலபலவாய் விரிந்துகிடக்கும் பல்வகையாய நெறிகளெல்லாம் முன்னும் பின்னுமாய் வரும் மார்க்கங்களெனத் தெளிதலே மேலான அன்பு மார்க்கத்தை யநுசரித்தோரது தீர்வையாம், அம்மார்க்கமே தூய்நெறி, சன்மார்க்கம், சமரசம். அதை மேற்கொள்ளுதலே ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடனும். எல்லாக் கடவுளருந் தாமாகவிருக்குந் தெய்வ வருட்கருணை யாவர்க்குந் துணைபுரிக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழி சோபனம் வாழிநல் லன்பர்கள்
சூழ வந்தருள் தோற்றமுஞ் சோபனம்
ஆழி போலரு ளையன் மவுனத்தால்
ஏழை யேன்பெற்ற இன்பமுஞ் சோபனம்.

எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

எவ்வுயிரும் என்னுயிர்மேல் எண்ணியிரங்கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மந்த்ரார்த்த ஸங்க்ரஹ விளக்கம்
முற்றுப்பெற்றது.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் மிளிர்கழல் வாழ்க.

சிவமயம்

# திருஞான சம்பந்த சுவாமிக ளருளிய

## பஞ்சாக்கரத் திருப்பதிகம்.

மூன்றாந் திருமுறை - பண் - காந்தாரம்.

### அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே. (க)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. (உ)

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (ங

நல்லவர் தீயரெ ளது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (௪)

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. (௫)

தும்ம லிரும லொருடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே. (௬)

வீடு பிறப்பை யறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாடொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி யுகப்பன வஞ்செ ழுத்துமே. (௭)

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செ ழுத்துமே. (௮)

கார்வண னான்முகன் காணு தற் கொணுச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்

பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. (௯)

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. (௰)

நற்றமிழ் ஞானசம் பந்த னுன்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம், திருஞான சம்பந்த சுவாமிகளுக்கு உபநயனச் சடங்கியற்றிய காலத்தே, சிஷ்ய பரம்பரையாய் ஓதியுணரவரும் வேதங்களை நமக்குத் தந்தோமென்று சுவஸ்தி வாசகமந்திரங்களை யுரைத்த அந்தணர்க்கு ஆளுடைய பிள்ளையார் வேதமந்திர ரகசியப்பொருள்களையெல்லாம் உபதேசித்து அவர் ஐயங்களை நீக்கியதோடு, இம்மந்திரங்களெல்லாம் உதித்தற்குக் காரணமாயுள்ளது ஸ்ரீ பஞ்சாக்ஷரமே என அதன் பெருமையினையுந் தெரித்தருளியது.

---

## திருஞான சம்பந்த சுவாமிக ளருளிய

### நமச்சிவாயத் திருப்பதிகம்.

மூன்றாந் திருமுறை - பண் - நட்டபாடை.

### அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. (க)

நம்பு வார்நமர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாம நமச்சி வாயவே. (உ)

நெக்கு ளார்வ மிகப்பெரு கிநினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே. (ந)

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. (ச)

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. (௫)

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. (௬)

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. (௭)

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளாம நமச்சி வாயவே. (௮)

போதன் போதன கண்ண னு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகிய லந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. (௯)

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்

விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுள் கண்ட னமச்சி வாயவே. (௰)

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாசம றுக்கவல் லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

**இந்தத் திருப்பதிகம்,** உலகம் வாழ உதித்தவராகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது திருமணக்காலத்திலே சிற்சோதி தோன்றியபோது, உலகருய்ய முத்திசாதனமான உண்மை நெறியைக் கூறி எண்ணிறந்த உயிர்களைப் பரமுத்தியிற் சேர்ப்பித்தருளியது. [மரணகாலத்திலும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமோதினால் இயமன் றூதரும் அஞ்சுவர் - இதனைக் கடைப்பிடிக்க.]

## திருநாவுக்கரசு சுவாமிக ளருளிய

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

நான்காந் திருமுறை - பண் - காந்தாரபஞ்சமம்.

### அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. (க)

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. (உ)

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. (௩)

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற்பி ரானென்று வினவு வோமல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. (௪)

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே. (ரு)

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லால்
நலமில னொடொறு நல்கு வானலன்
குலமில ராகினுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. (சா)

வீடினு ருலகினில் விழுமிய தொண்டர்
கூடினு ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னடிற்று நமச்சி வாயவே. (எ)

இல்லக விளக்கது வீருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே (அ)

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணுத றிண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. (கூ)

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ

நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. (௰)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம், சமண மாக்கள் திருநாவுக்கரசுமூர்த்தி சுவாமிகளைக் கற்றூணிற்கட்டிக் கடலிற்றள்ளியபோது ஓதி கல்லே தெப்பமாக மிதந்து வந்து கரைசேர்ந்தது.

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிய.

## நமச்சிவாயத் திருப்பதிகம்.

### திருப்பாண்டிக் கொடுமுடி.

ஏழாந்திருமுறை - பண் - பழம்பஞ்சுரம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமேமனம் பாவித்தேன், பெற்றலும் பிறந் தேனி னிப்பிற வாததன் மைவந் தெய்தினேன், கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி, நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (க)

இட்ட னும்மடி யேத்து வாரிகழ்ந் திட்ட நாண்மறந் திட்டநாள், கெட்ட நாளிவை யென்ற லாற்கரு தேன்கிளர் புனற் காவிரி, வட்ட வாசிகை கொண்டடிதொழு தேத்து

பாண்டிக் கொடுமுடி, நட்ட வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (உ)

ஓவு நாளுணர் வழியு நாளுயிர் போகு நாளுயர் பாடை மேல், காவு நாளிவை யென்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப், பாவு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி, நாவ லாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே, (ங)

எல்லை யில்புக ழெம்பி ரானெந்தை தம்பி ரானென் பொன் மாமணி, கல்லை யுந்திவ ளம்பொ ழிந்திழி காவி ரியதன் வாய்க்கரை, நல்ல வர்தொழ தேத்துஞ் சீர்க்கரை யூரிற் பாண் டிக் கொடுமுடி, வல்ல வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (ச)

அஞ்சி னார்க்கர ணாதி யென்றடி யேனு நான்மிக வஞ்சி னேன், அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருணல்கினாய்க் கழி கின்றதென், பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி, நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (ரு)

ஏடு வானிளந் திங்கள் சூடினை யென்பின் கொல்புலித் தோலின்மேல், ஆடு பாம்பத ரைக்க சைத்த வழகனே யந்தண் காவிரிப், பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச், சேடனேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே (சு)

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டனன், நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெறநின்ற காவிரிக்கோட்டிடை, குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடு பாண்டிக்கொடுமுடி, விரும் பனேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (எ)

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய், வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக், கொம்பின் மேற்குயில் கூவ மாமயி லாடு பாண் டிக் கொடுமுடி, நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே. (அ)

சாரணன் றந்தை யெம்பிரானெந்தை தம்பிரானென் பொன்மாமணியென்று, பேணுயிர கோடி தேவர்பி தற்றி நின்று பிரிகிலார், நார ணன்பிர மன்றொ ழுங்கரை யூரிற் பாண்டிக் கொடுமுடிக், காரணாவுனை நான்ம றக்கினுஞ் சொல் லுநா நமச்சி வாயவே. (௯)

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடு முடி, பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப், பாணு லாவரி வண்டறைகொன் றைத்தாரனைப் படப்பாம்பரை, நாணனைத்தொண்டனூரன் சொல்லிவை சொல்லுவார்க் கில்லைத் துன்பமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் கொங்கநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கொடுமுடிநாதர், தேவியார்-

பண்மொழியம்மை.

இந்தத் திருப்பதிகம், "உன்னை நான் மறக்கினும் [மறக்கேன் - அப்படி மறந்தாலும்] என்னுடைய நா உன்னுமத்தைச் சொல்லிக் கொண்டே யிருக்கும்" என்று தெரித்தருளியது. இவ்விதத் தன்மை யெய்தினவரே தமது காணங்களைப் பேரின்ப வுருவமாகப் பெற்றவர். இவரது செயல்கள் யாவுஞ் சிவச்செயலே. இவர்கள் மனித வர்க்கத்தவரன்று. அன்பு மார்க்கமாகிய சமரச நன்னிலையில் நின்ற அருள் வர்க்கத்தவர். சிவமேயாய்த் திகழ்ந்தவர். அதாவது அறிவுருவாய் நின்றவர்.

---

ஸ்ரீ

திருமங்கையாழ்வா ரருளிய

## பெரிய திருமொழி.

(முதற்பத்து)

### திருமந்த்ர மஹிமை.

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மொடு
அவர்தருங் கலவியே கருதி

ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (க)

ஆவியே அமுதே எனநினைந் துருகி
அவரவர் பணைமுலை துணையா
பாவியே னுணரா தெத்தனை பகலும்
பழுதுபோ யொழிந்தன நாள்கள்
தூவிசே ரன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனற் குடந்தையே தொழுதேன்
நாவினா லுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (உ)

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித்
தெரிவைமா ருருவமே மருவி
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்
ஒழிந்தன கழிந்தவந் நாள்கள்
காமனார் தாதை நம்முடை யடிகள்
தம் மடைந் தார்மனத் திருப்பார்
நாமம்நா னுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (ந)

வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி

நின்றவா நில்லா நெஞ்சினை யுடையேன்
என்செய்கேன் நெடுவிசும் பணவும்
பன்றியா யன்று பாரகங் கீண்ட
பாழியா னாழியா னருளே
நன்றுநா னுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (௪)

கள்வனே னானேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலும்
தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்
உள்ளெலா முருகிக் குரல்தழுத் தொழிந்தேன்
உடம்பெலாங் கண்ணநீர் சோர
நள்ளிரு ளளவும் பகலும் நானழைப்பேன்
நாராயணா வென்னும் நாமம். (௫)

எம்பிரா னெந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கர சென்னுடை வாணாள்
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்த எம்மண்ணல்
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகா ளுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (௬)

இற்பிறப் பறியீர் இவரவ ரென்னீர்
    இன்னதோர் தன்மையென் றுணரீர்
கற்பகம் புலவர் களைகணென் றுலகில்
    கண்டவர் தொண்டரைப் பாடும்
சொற்பொரு ளாளீர் சொல்லுகேன் வம்மின்
    சூழ்புனற் குடந்தையே தொழுமின்
நற்பொருள் காண்மின் பாடிநீ ருய்மின்
    நாராயணா வென்னும் நாமம்.

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
    கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலே னதனால் பேதையேன் நன்மை
    பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன்
    செல்கதிக் குய்யுமா றெண்ணி
நற்றுணை யாகப் பற்றினே னடியேன்
    நாராயணா வென்னும் நாமம்.

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
    படுந்துய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
    அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
    தாயினு மாயின செய்யும்

நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். (௬)

மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையர் வாட்கலி கன்றி
செஞ்சொலா லெடுத்த தெய்வ நன்மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா வென்னும் நாமம். (௰)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

இந்நூல் வேண்டியவர்கள் அடியில் கண்ட விலாசத்துக் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

(1) சோ. சிவஅருணகிரி முதலியாரவர்கள்

ஆனந்தநிலயம், சோளங்கிபுரம்

வட ஆற்காடு ஜில்லா.

Sholinghur (North Arcot Dt.)

(2) 159, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி (மதராஸ்)

Triplicane, Madras.